விலை சதம் 50 ★ பக்கங்கள்—8

# ஈழநாடு
## வார மலர்
*THE EELANADU VARAMALAR*

மலர் 19 | கார்த்திகை 12 | ஜுல்கஜ் 15 | ஞாயிற்றுக்கிழமை | [27—11—77] | இதழ் 287

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், மொம்பே சுவீட்ஸ்

றிக்கோ பீடா வகைகளுக்கும்

**றிக்கோஹோட்டல்**

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 464

நாவலர் நீதி வாக்கியம்

3-12-77 ஆறுமுகநாவலர் குருபூசையை முன்னிட்டு நாவலர் நீதி வாக்கியம் என்னும் புத்தகத்தையும், படத்தையும், 10 மில்க்வைற் நீல சோப் அல்லது 1. பார் சோப் அல்லது 2 நீலசோப் அல்லது 2 மெடிக்கேற்றட் சோப் மேலுறைகளை அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

விநியோகப்பகுதி
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.

# தமிழ் இனத்தின் இறைமையை உரிய நேரத்தில்
# நிலைநாட்டத் தவற மாட்டோம்

## 'திரு' அஞ்சலிக் கூட்டத்தில் 'அமிர்' மாவட்ட அமைச்சர் பதவிபற்றியும் கருத்து

(யாழ்ப்பாணம்)

**"நாம் எமது இலட்சியமான தமிழீழத்தை அடைய சமாதானவழியை நாடுவோம். இல்லையேல் சரியான நேரத்தில் உரிய போராட்டத்தை ஆரம்பித்து எமது இறைமையை நிலைநாட்டுவோம். இதில் எவரும் சந்தேகம்கொள்ளவேண்டியதில்லை. எதிர்க்கட்சித் தலைவர் பதவி இந்த இலட்சியத்தை விரைவாக அடைவதற்கேயொழிய எனது சுகபோகங்களுக்காகவல்ல."**

இவ்வாறு நேற்று நல்லூர் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற அமரர் திருச்செல்வத்தின் முதலாண்டு அஞ்சலிக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசிய எதிர்க்கட்சித்தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபருமான திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: மாவட்ட அமைச்சர்கள்பதவிகள் இங்கு வரும் அமைச்சர்களுக்கு மாலை அணிவித்து அவர்களுக்கு துதி பாடுவதற்கே. முன்னாள் அமைச்சர் அமரர் திருச்செல்வம் அமைச்சர் பதவியிலிருந்தபோது தாம் அனுபவித்த கஷ்டங்களையெல்லாம் எமக்கு எடுத்துச்சொல்லியுள்ளார். எமது இயக்கம் ஒரு விடுதலை இயக்கம். நாம் ஆண்டபூமியை மீண்டும் ஆளுவதற்கு வழி தேடிக்கொடுப்பதேஎமது இயக்கத்தின் நோக்கம். இந்நிலையில் எமது உரிமைகளை நிலைநாட்டும்வரை எந்த மந்திரிப்பதவிகளையும் ஏற்கக் கூடாதென அமரர் திருச்செல்வம்கூட எமக்கு கூறியுள்ளார். எவ்வித [illegible] மாவட்ட மந்திரிப்பதவிகளை ஏற்று மீண்டும் இந்த இனத்தை அடிமையாக்க மாட்டோம்.

### ஆட்சிமன்றத் தெரிவுக்குழுவில்...

அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கான தெரிவுக் குழுவில் நாம் அங்கம் வகிக்க மறுத்ததற்கு பலகாரணங்களுண்டு தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதனால் எமது இலட்சியமான தனிநாடுபற்றிப்பேச எமக்கு அருகதையில்லாது போய்விடும் ஒற்றையாட்சியில் அடங்க

(8-ம் பக்கம் பார்க்க)

## கருணாநிதிக்கு தொடர்ந்தும் றிமாண்ட்

சென்னை, நவ. 26 தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தொடர்ந்தும் அடுத்த மாதம் 8 ம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

திரு. கருணாநிதியும் மற்றும் 25 பேரும் இன்று சென்னை மெற்றபோலிட்டன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோதே இவர்கள் அனைவரையும் டிசம்பர் மாதம் 8-ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 30-ம் திகதி சென்னையில் திருமதி இந்திரா காந்திக்கு எதிராக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தியதை அடுத்து திரு. கருணாநிதியும் மற்றும் 25 பேரும் கைதுசெய்யப்பட்டது தெரிந்ததே. (இ)

## இப்படியும் ஒரு புகார்

(யாழ்ப்பாணம்)

தம்மைத் தாக்கிய ஒருவர் தமதுபணத்தைப் பறித்துவிட்டார் என்று பொலிஸில் புகார் செய்த ஒருவரின் மலவாசலிலிருந்து பொலிசார் அப்பணத்தை மீட்டனர்.

இச்சம்பவம் நேற்று யாழ். பொலிஸில் இடம்பெற்றது. கண்டியைச் சேர்ந்த கந்தையா கணேசு என்பவர் தம்மைத்தாக்கிவிட்டு தம்மிடமிருந்த 250ரூபாவைப் பறித்தெடுத்ததாக மன்னாரைச் சேர்ந்த முத்தையா குமார் என்பவர் யாழ். பொலிசில் புகார்செய்திருந்தாராம்.

அவர்மீது சந்தேகம் கொண்ட கான்ஸ்டபிள் திரு.

(8 ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்கள் சேவை நீடிப்பு: கல்வி அமைச்சின் புதிய உத்தரவு

(கொழும்பு)

55 வயதுக்கு மேல் 58 வயது வரை சேவை நீடிப்புப் பெற விரும்பும் ஆசிரியர்களும் கல்வித் திணைக்கள ஊழியர்களும் பிராந்திய கல்வி அதிபர்கள், பிரதம கல்வி அதிகாரிகள் மூலம் இனிமேல் தமது சேவை நீடிப்பைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் சேவை நீடிப்பு வழங்கும் அதிகாரத்தைக் கல்வி அமைச்சு கல்வி அதிபர்களுக்கும் பிரதம கல்வி அதிகாரிகளுக்கும் வழங்கியுள்ளது.

58வயதுக்கு மேல் சேவை நீடிப்பு பெறவிரும்புவோருக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்ற பின்னரே சேவை நீடிப்பு வழங்கப்படும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சேவை நீடிப்பு பெறவிரும்புவர்களுக்கு அவர்களின் தொழில்திறன்' ஒழுக்கம், உடல்நலம், உளநலம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே சேவை நீடிப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் கல்வி அமைச்சு பணித்துள்ளது. (இ)

வெளிவந்துவிட்டது! 2-ம் பதிப்பு

**24 மணி நேரம்**

நீலவண்ணன் எழுதிய வரதர் வெளியீடு

இனக்கலவரத்தின் ஆரம்பம், அதன் பயங்கரப் பாதிப்புகள், அது தோன்றிய காரணம்- எல்லாம் விபரமாக தகுந்த ஆதாரங்களுடன் விவரிக்கப்பெற்றுள்ளது

விலை ரூபா 6-50 (தபால் செலவு சதம் 60)

**ஆனந்தா புத்தகசாலை**

226, காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்
தொலைபேசி: 348

## மும் மொழித் திட்டத்தினால் இனஐக்கியம் காணமுடியாது
### அக்டோபர் புரட்சிக் கூட்டத்தில் வி.பி.

(யாழ்ப்பாணம்)


"மனிதனை மனிதனாக மதிக்கும் தன்மையை பெரும்பான்மையினர் உணரத் தலைப்படும் பட்சத்தில் மட்டுமே இலங்கையில் இன ஐக்கியம் உருவாகும் அதைவிடுத்து அரசு கூறுவது போல் மும்மொழித்திட்டத்தினாலோ வேறுபல செயல்களினாலோ இனஐக்கியம் காணமுடியாது. மனிதனை மனிதனாக உணரத் தலைப்பட்டதை எமக்கு 60 ஆண்டுகளுக்கு முன்னர் மாமேதை லெனின் காட்டியுள்ளார்." என்று யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அக்டோபர் புரட்சிதின விழாவில் கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு.வி. பொன்னம்பலம் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

எதிர்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் தலைமை வகித்த இக் கூட்டத்தில் திரு. வி.பொன்னம்பலம் தொடர்ந்து கூறியதாவது "சோவியத் நாட்டின் சோஷலிசக் கொள்கை பற்றிப் பேசுகிறீர்களே அங்கு எதிர்க் கட்சியமைப்பு முறையில்லையே என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் பிரதிநிதிகளைக் கேட்கின்றார்கள். நான் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன் சோவியத் நாட்டில் சிறுபான்மை இனங்கள் நசுக்கப்படுகின்றனவா? அங்கு அவர்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை இழந்திருக்கின்றனரா? தனித்துவத்தை காக்க பிரிந்து செல்லும் உரிமை மறுக்கப்படுகின்றதா? அல்லது வரவு - செலவுத் திட்டத்தில் விலைகள் அதிகரிக்கப்படுகின்றனவா? போன்றவற்றை இவர்கள் உணர வேண்டும் இதனால் அங்கு எதிர்கட்சி அவசியம் இல்லை யென்பதை இவர்கள் சிந்திக்க வேண்டும் இங்கு சகலவசதிகளையும் எதிர்கட்சிக்கு வழங்கி விட்டு தவறுகளைச் சுட்டிக்காட்டாத கைப்பொம்மைகளாக வைக்கப்பார்க்கின்றார்கள்.

"அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தில் வேலையற்றோருக்கு வேலைவாய்ப்பளிக்கும் பொறுப்பு தன்னுடையதென ஏற்றுக்கொண்டுள்ளது ஐம்பது ரூபாய் விசேடபடி கொடுத்து இளைஞர்களைப் புரட்சிக்கு வழிவகுக்காமல் இருப்பதற்கு வழிசெய்துள்ளது. ஆனால் அரசாங்கம் வேலையற்றோருக்கு வேலை வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதை பாராட்ட வேண்டியது எனது கடமை.

'பல ஆண்டுகளாக இலங்கை வெள்ளையர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தபோது. தனது சொந்த நாட்டுக்கு விடுதலை கேட்ட சேர். பொன்னம்பலம் அருணாசலத்தை'போல்ஷ்விட்' என அழைத்தார்கள்! போல்ஷ்விட் என்பது ரஷ்ய மொழியில்

(8-ம் பக்கம் பார்க்க)



பத்திரிகைத்துறையில் வெள்ளி விழாக் கண்ட 'ஈழநாடு' பதில் ஆசிரியர் திரு. எஸ். எம். கோபாலரத்தினத்துக்கு அவரது சேவையைப் பாராட்டி 'ஈழநாடு' ஆசிரியர் பகுதியினர் பாராட்டு விழா அளித்துக் கௌரவித்தனர். பொதுமுகாமையாளர் திரு. து. சினிவாசகம் அவர்களும் திரு. கோபாலரத்தினமும் ஆசிரியர் குழுவினருடன் இருப்பதை இங்கே காணலாம்.

பாடசாலை நூலகங்கள்—(5)

# நூலகப் பாடநேரமும் பயன்படுத்தும் முறையும்

ஒரு வகுப்புக்கு வாரத்தில் ஒரு பாட நேரமாவது நூலகத்துக்கென்று ஒதுக்குதல் வேண்டும். அறிவையூட்டி, புத்திக் கூர்மையைச் விருத்திசெய்து, கற்பனை சக்தியைத் தூண்ட வல்ல ஒரு நிலையமாகும். அது ஒரு வரலாற்றுக் களஞ்சியமாகவும் பண்பாட்டுப் பரிமாற்றக் களமாகவும் விளங்குகின்றது. நல்லதொரு நூல்நிலையம் சிறந்ததொரு சர்வதேசப் படமாளிகையாகும். எனவே ஒதுக்கப்படும் ஒரு பாடநேரத்திலும் மாணவர்கள் நூல்நிலையத்தைத் தக்கவாறு பயன்படுத்த வகைசெய்தல் பாடசாலையின் கற்பித்தல், நூல் நிலைய பணிகளில் ஒன்றுதல் வேண்டும். நூல்நிலையத்தைப் பயன்படுத்தும் முறைகள் மாணவர்களுக்குப் படிப்படியாகப் பயிற்றுவித்தல் இன்றியமையாதது. இம்முறைகளுள்

1. நூல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் முறை
2. நூல் தட்டிலிருந்து நூல்களை எடுக்கும் முறை.
3. விலையுயர்ந்த நூல்களை பேணும் முறை.
4. அரிய நூல்களை அணுகும் விதம்.
5. உடனுதவு நூல்களைக் கையாளும் விதம்.
6. வீட்டுக்கு எடுத்துச்செல்லும் நூல்களைப் பாவிக்கும் முறை; அவற்றை உரிய காலத்தில் திருப்பிக்கொடுக்கும் பழக்கம்.
7. நூற்பட்டியலிலிருந்து நூல்களைத் தெரிவுசெய்யும் முறை.
8. அகராதி, கலைக்களஞ்சியம், ஆண்டுப் புத்தகம், தேசப் படத் தொகுதி, வழிகாட்டி, புள்ளி விவரக்கொத்து, தேசிய விவரத்திரட்டு முதலாய

**கவிஞர் வி. கந்தவனம்**

உசாவு நூல்களைப் பயன்படுத்தும் முறை.
9. நூல்நிலையத்துள் நடந்து கொள்ளும் விதம்.
10. நூல் நிலையத்தின் மகத்துவத்தை உணர்தலும் அதனை மதித்தலும். என்பனவற்றைப் பிரதானமாகக் குறிப்பிடலாம்.

பல நூலகங்களிற் கட்டுப்பாடுகள் அதிகம் அங்கே செல்லக்கூடாது; இங்கேகைபோடக் கூடாது; சத்தம் போடக் கூடாது என்று பயமுறுத்தும் சட்டதிட்டங்கள் பல. கீழ் வகுப்புப் பிள்ளைகளுக்கு இத்தகைய 'கடும் பிடிகள்' நூலகத்தில் வெறுப்பை உண்டு பண்ணலாம். கட்டுப்பாடுகள் இருக்கவேண்டும். எனினும் அவற்றைப் பிள்ளைகளின் வகுப்பு நிலைகள், ஆர்வம், மனோ நிலைகள் என்பவற்றுக்கேற்பத் தளர்த்தியும் அனுசரித்தும் பிரயோகித்தல் அதிக நன்மை பயக்கும்.

பாலர் பிரிவுள்ள பாடசாலைகளில் அவர்களுக்கேற்றவகையில் நூலகத்தில் அல்லது அதனுடன் இணைந்திருக்கும் ஓர் அறையில் ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்துதல் அவசியம்.

கீழ் வகுப்புப் பிள்ளைகளுக்கு வாரத்துக்கு ஒரு புத்தகமும் மேல் வகுப்புப் பிள்ளைகளுக்கு இரு வாரங்களுக்கு ஒரு புத்தகமுமாகக் கொடுத்தல் விரும்பத்தக்க ஒரு முறையாகும். மேல் வகுப்புப் பிள்ளைகளுக்குப் புத்தகங்களைத் தெரிவுசெய்வதற்கும் எடுத்த புத்தகங்களைத் திருப்பிப் பெறுவதற்கும் வேறு நேரங்களை ஒதுக்குதல் நல்லது. இவற்றை நூலகப் பாடநேரத்திலே செய்வதாயின், நூலகத்தாற் பெறக்கூடிய பிற நன்மைகளை மாணவர்கள் இழக்கக்கூடும். நூலகப் பாட நேரத்தைச் சஞ்சிகைகள், செய்தித்தாள்கள் போன்றவற்றைப் படிப்பதற்கும் உசாவு நூல்களிலிருந்து குறிப்புகள் எடுப்பதற்கும் பயன்படுத்தலாம்.

நூலகப் பாடநேரத்தில் வாசிப்புப் பழக்கத்தைப் பிரதானமாக ஏற்படுத்துதல் வேண்டும். இதற்காகச் சில சிறப்பு முயற்சிகளைக் கையாளலாம் உதாரணமாக,

1. குறிப்பிட்ட சில சொற்களை நூல் ஒன்றிற் கண்டு பிடிக்கும்படி கூறுதல்.

2. ஒரு நூலைக் கொடுத்து அதிலுள்ள ஒரு சிறப்புக்கருத்தினை விளக்கி அக்கருத்துப் பற்றி மாணவர்களின் சொந்த அபிப்பிராயங்களைக் கேட்டல்.

3. ஒரு கதையின் ஒரு பகுதியைச் சுவைபடக்கூறி மிகுதியைப் புத்தகத்தில் படிக்கும்படி தூண்டுதல்.

4. ஒரு குறிப்பிட்ட விடயம் பற்றி (உதாரணமாக இலங்கையைப் பற்றி)யுள்ள நூல்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கும்படி கூறுதல்.

5. வகுப்பு வேலைகளுடன் நூலக பாடநேரத்தை இணைத்தல். உதாரணமாக மொழிப் பாடமென்னின்,

(அ) ஒரு நூலிலே இரு பக்கங்களைக் கொடுத்து விரைவாக அதனைப் படித்துச்சரியான சுருக்கத்தை எழுதச் செய்தல்.

(ஆ) எழுத்துப் போட்டிகள் நடாத்தல்.

(இ) ஒரு கட்டுரைத் தலைப்பைக் கொடுத்து அதற்குரிய விடயங்களைச் சேகரிக்கும்படி பணித்தல்.

இவ்வேலைப்பாடுகள் நூலகப் பாட நேரத்துக்குள் முடிக்கக் கூடிய முறையில் திட்டமிடப்படல் வேண்டும்.

"குளறி கந்தையா"

30-11-77-ல் யாழ். நகரில்

எஸ். பி. சாமி அன் கொம்பனி

தமது கிளை ஸ்தாபனத்தை ஆரம்பிப்பதை முன்னிட்டு இன்று பிற்பகல் 3-45 மணிக்கு 'வரணியூரான்' எழுதும் நகைச்சுவைத் தொடர் நாடகம் வானொலியில் ஒலிபரப்பாகிறது. பிரதி ஞாயிற்றுக்கிழமையும் பி. ப. 3-45-க்கு நேயர்கள் 'குளறி கந்தையா' நாடகத்தைக் கேட்டு மகிழலாம்.

எஸ். பி. சாமி அன் கோ.

193, மின்சார நிலைய வீதி—யாழ்ப்பாணம்

மயிலிட்டி

# மார்பு நோய் ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் பிரிவு

[மாவிட்டபுரம்)

மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலையில் மார்பு நோயாளர் மாத்திரமன்றி ஏனைய நோயாளர்களுக்கும் சிகிச்சை அளிப்பதற்காக வெள்ளி செவ்வாய் ஆகிய இருதினங்களிலும் வெளி நோயாளர் பிரிவு ஒன்று இயங்க ஆரம்பித்துள்ளது.

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரி தெல்லிப்பழைக்கு மாற்றப்பட்டதையடுத்து காங்கேசன்துறை மயிலிட்டி பலாலி உட்பட மற்றும் இச் சுற்றுடலிலுள்ள கிராம மக்கள் தெல்லிப்பழைக்குச் சென்று வர பெரிதும் கஷ்டப்பட்டதன் காரணமாக இந்தவெளி நோயாளர் பிரிவு இயங்க ஆரம்பித்துள்ளது.

மார்பு நோயாளர்களுக்குள்ள வார்ட்டுகளிலிருந்து வேறுபட்டதாக மற்றும் நோயாளர்களை அனுமதிப்பதற்காக வார்ட் ஒன்றும் அமைத்துத்தருமாறு சுகாதாரப்பகுதியினரிடமும் காங்கேசன்துறை எம். பி யிடமும் கோரப்பட்டுள்ளது.

மார்பு நோயாளர்களை மட்டும் அல்லாது வெளிநோயாளர்களையும் பரிசோதித்து சிகிச்சையளிப்பதில் இவ் வைத்தியசாலை டாக்டர் கே. பொன்னம்பலமும் மற்றும் வைத்திய அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர்.

பாலர் வகுப்பு ஆசிரியைகள் மகஜர்:

# நடவடிக்கை எடுப்பதாக கூறுகிறார் உடுப்பிட்டி எம். பி.

[நெல்லியடி]

வட இலங்கைப் பாலர் பாடசாலை ஆசிரியைகள் சங்கம் தமது குறைகள் அடங்கிய மகஜர் ஒன்றை உடுப்பிட்டி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. த. இராசலிங்கத்திடம் கையளித்துள்ளது.

'அரசாங்கத்தின் புதிய கல்வித்திட்டத்தின்படி. ஆரம்ப வகுப்பு மாணவர் 5 வயது முடிந்தபின் பாடசாலையில் சேர அனுமதிக்கப்படவுள்ளனர். அரசின் இப்புதிய திட்டப்படி பல நூற்றுக்கணக்கான பாலர் வகுப்பு ஆசிரியைகள் தம் வருமானத்தையும் தொழிலையும் இழக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. பாலர் ஆசிரியைகளுக்கான பயிற்சியைப் பெற்றுள்ள இவர்கள் பல்லாண்டுகளாகவே இத்தொழில் ஈடுபட்டுவருவதால் புதிதாக நியமனம் பெறவிருக்கும் ஆசிரியர் பதவி நியமனங்களில் தமது சங்கத்தைச் சார்ந்தவர்களுக்கு முதலிடம் அளிக்குமாறு' இம் மகஜரில் கோரப்பட்டுள்ளது.

இம்மகஜரை சங்கச் செயலாளர் கந்தசாமி அமிர்தாம்பிகை, தலைவர் அ. ராஜேஸ்வரி ஆகியோரைக் கொண்ட குழுவே உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கத்திடம் ஒப்படைத்தது.

## எம். பி. கருத்து

இம்மகஜர் பற்றி 'ஈழநாடு' நிருபரிடம் திரு. த. இராசலிங்கம் எம். பி. தெரிவிக்கையில், வட இலங்கை தமிழ்ப் பாலர் பாடசாலை ஆசிரியைகளின் பிரச்சினை சம்பந்தமாகத் தாம் நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

பல நூற்றுக்கணக்கான ஆசிரியைகள் வேலையிழப்பது பரிதாபத்துக்குரியது என்று தெரிவித்த அவர், உடன் நிவாரணமளிக்கவேண்டியது அவசியம் என்றும் மேற்படி சங்கத்தைச் சேர்ந்த ஆசிரியைகளின் விடயம் சம்பந்தமாக கல்வியமைச்சரையும் மற்றும் உயர் கல்வி அதிகாரிகளையும் தாம் சந்திக்கப்போவதாகவும், இந்நடவடிக்கைகளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பாகவே தாம் செய்யப்போவதாகவும் கூறினார்.

வரி விளம்பரம்

விற்பனைக்கு

குப்பிழான் ப. நோ. கூ. சங்கத்திற்கு எதிர்ப்புறமுள்ள காணி 6 பரப்பு [பிரதான வீதிக்கு அருகாமையில்] விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சு. தம்பிஐயா, 80, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம். 7755

விற்பனைக்கு

வல்வெட்டித்துறை போட்யாடில் செய்த 36 அடி நீளமான ட்ரோளர் வள்ளம் என்ஜின் அல்லாமல் சகல வசதிகளுடன் மன்னார் போட்யாடில் விற்பனைக்கு உண்டு. விலை விபரங்களை 27-11-77ல் யாழ்ப்பாணம் றெஸ்ற் கவுசில் நேரில் துரத்திடம் அறியலாம். M.A. துரம், கணக்காளர், பேசாலை. 7774

தேவை

யாழ்ப்பாணம் இல. 9 ஸ்ரான்லி வீதி பரமேஸ்கோணேஸ் புரடக்ஷன்ஸ் ஸ்தாபனத்திற் கடமையாற்ற இசை ஆர்வம் மிக்க இருவர் தேவை. ஆண் பெண் எவராயினும் 29-11-77 மாலை 4 மணிக்கும் 6 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நேரிற் சந்திக்கவும். கட்டுப் பணம் செலுத்த வேண்டும். நற்சாட்சிப் பத்திரம் கொண்டு வரவும். பரமேஸ்கோணேஸ் புரடக்ஷன்ஸ். 7773

13 வயதுக்கு மேற்பட்ட வேலை பழகுநர்கள் (ஆண்கள்) கண்ணாடித் தொழிற்சாலைக்கு உடனடியாகத் தேவை. வேலை பழகும்பொழுதும் வேதனம் கொடுக்கப்படும். நேரில் வரவும். 25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7742

# அப்பா வருவாரா?

'வளவன்'



விடிந்தால் வெள்ளிக்கிழமை. வாழ்க்கையில் இப்படி எத்தனையோ வெள்ளிக்கிழமைகள் வந்துபோயின. ஆனால் நாளை வரப்போகும் வெள்ளிக்கிழமை, அதுதான் அமராவினதும், நான்கு பிள்ளைகளினதும் எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிக்கப்போகிறது. அரைத் தூக்கத்தில் சிணுங்கிக்கொண்டிருந்த செவ்வந்தியை அருகே இருந்து அணைத்துக் கொண்டிருந்தாள் அமரா. அவள் மனம் மட்டும் விசித்துவிசித்து அழுது கொண்டிருந்தது. பாவம் பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால் பெரும்பிழை தானோ?

''அமரா...அமரா...'' தந்தை ஜெயதேவசின்குரல் கணீரென ஒலித்து ஓய்ந்தது. செவ்வந்தியைத் தூங்கவைத்துக்கொண்டிருந்த அமரா மெல்ல எழுந்து அப்பால்சென்று ஹோலினுள் பிரவேசித்தாள். அட்வகேட் ஆறுமுகம் ஜெயதேவனோடு ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார். அமரா... நாளைய விளக்கத்தைப் பற்றி ஒத்திகை பார்க்க வேண்டாமா?—அட்வகேட் ஆறுமுகத்தின் கேள்வி இது.

என்னண்ணை நாளைக்குவிளக்கம் இன்றைக்கு கலந்துரையாடாமல் எப்படி ... இழுத்து நிறுத்தினாள் அமரா.

அட்வகேட் ஆறுமுகம் தூரத்து உறவினராக இருந்ததால் அமரா அண்ணை என்றுதான் அழைப்பது வழக்கம். அமராவின் அப்பா ஜெயதேவன் லோயராகப் பிரசித்திபெற்றிருந்த காலத்தில் அவரின் கீழ் ஜூனியராகச் சிலகாலம் இருந்தவர் தான் ஆறுமுகம். ஜெயதேவர் பாரிசவாதத்தால் பீடிக்கப்பட்டு வீட்டோடுமுடங்கிக் கொண்டது முதல் அட்வகேட் ஆறுமுகத்தின் புகழ் கொடிகட்டிப் பறந்தது. உறவினராக இருப்பதாலும் தனதுகுருவாக ஜெயதேவர் இருந்ததாலும் அமராவின்வழக்குப்பற்றி கலந்துரையாட அமராவின் வீட்டிற்கே வந்துவிடுவதுவழக்கம்.

வழக்குப்பற்றியகேள்விகளும் பதில்களுமாக சில நிமிடங்கள் சென்றன. அமரா அழுதழுது கண்ணீரோடுதான் அவருக்குப் பதில் சொல்லி முடித்தாள். பாவம் நாளை நடைபெறப் போகும் விளக்கத்தில் எப்படி எப்படி எல்லாம்கேட்கப்போகிறார்களோ... நாலு சனத்திற்கு முன்வைத்து இப்படியெல்லாம்... இன்னும் எப்படி எப்படியெல்லாமோ கேட்க நேர்ந்துவிட்டதே என்றநினைப்பின் எதிரொலி போலும் அமராவிற்கு.

''அமரா நீ ஏன் வீணாக அழுது தொலைக்கிறாய். இந்த வழக்கின் முக்கிய சாட்சி தானே. டாக்டருடைய விளக்கத்தோடுகூடசிலவேளைவழக்கு முடிந்துவிடலாம். இதற்குப் போய் அழுகிறியே சின்னப் பிள்ளைமாதிரி.''

''அண்ணை இது ஒரு தன்மானப்பிரச்சினையான வழக்கு என்பது தாங்கள்அறியாததா. எந்த ஒரு பெண்ணுக்கும் ஏற்படக்கூடாத ஒரு இழிந்த நிலை எனக்கு வந்துவிட்டதே ... அதை நினைத்தபோது அழுவதைத்தவிர வேறுவழிஎனக்குத் தெரியவில்லையே...'' அமரா இழுத்து நிறுத்தினாள்.

அமராவின் நிலையை எண்ணியபோது ஆறுமுகத்திற்கும் துன்பமாகத்தான் இருந்தது. இருந்தும் அவர் என்ன செய்து விடமுடியும். அவசர அவசரமாக அமரா தயாரித்துக் கொடுத்த கோப்பியைப்பருகிவிட்டு ஆறுமுகம் சென்றுவிட்டார்.

ஜெயதேவர் ஹாலின் ஒரு புறத்தில் தனது கட்டிலில் வீழ்ந்து கொண்டார். அமராவால்மட்டும் இன்னமும் படுத்துக் கொள்ளமுடியவில்லை. தூக்கமேஅவளைவிட்டு தூரவே நின்று, அவள் துடிப்பதைப் பார்த்துச் சிரித்தது. அமரா அமைதியானஇரவோடு அமைதியின்றிப் போராடிக் கொண்டிருந்தாள். மூன்று குழந்தைகட்குத்தாயாகிவிட்ட ஒருத்தியின் மீது களங்கத்தைச் சுமத்திவிட்டு விவாகரத்துக் கோரி வழக்கு எனறால் ... அதுவும் காதலித்துக் கல்யாணங் கட்டியபுருஷனே செய்வதென்றால், எப்படித்தான் ஒருபெண்ணால் அமைதியாக இருக்கமுடியும். துரும்பாக இளைத்துப் போன அமராவிடம் அந்தப் பிஞ்சுக்குழந்தைகளின் கேள்வி வேறு அவளைத் துளைத்துக் கொண்டேஇருக்கிறது.

''அம்மா அம்மா... அப்பா வரமாட்டாரா? எங்கையம்மா அப்பா. அப்பா வரமாட்டாரா ... செவ்வந்திப்பப்பாவைத் தூக்கமாட்டாரா'' இப்படி எத்தனை எத்தனை கேள்விகளைத்தான் அவள்மகன் எழிலிடம் கேட்டுக் கேட்டு பதில்சொல்லத் தவித்திருப்பாள். அந்தக்குழந்தைகளோடு சேர்ந்து கேள்வி கேட்பதற்கு இன்னொன்றென செவ்வந்தியும் பிறந்துவிட்டாளே. எல்லாக் குழந்தைகளையும் எத்தனை நாளைக்குதான் ஏமாற்றுவது, அப்பாவருவார்வருவாரென்று. குழந்தைகளைத்தான் ஒருவாறு சமாளித்துக் கொண்டாலும், சமூகத்தின் வடுக்கணைகளைத் தாங்கிக்கொண்டு இந்தமூலைக்குள்ளேயே முடங்கிக்கொள்ள வேண்டியதுதானா? அமராவின் விழிகள் அணைகடந்த வெள்ளம்போல கண்ணீரைச் சொரிந்துகொண்டே இருந்தது.

தூக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்த அமராஎழுந்து சென்று தன் கைப்பையில் வழக்கிற்காகத் தயாராக இருந்த அந்தக் கடிதங்களை எடுத்துப்படித்தாள்.

''அன்பே அமரா! அருள், திரு, எழில், —இந்த முத்தான மூன்றுசெல்வங்களையும்பெற்ற பாக்கியசாலிகள் தானே நாம். மூன்று முத்துக்களையும் இறப்போடு வாழவைப்பதற்காக இனிஒரு குழந்தையைப் பெறுவதில்லை என்றமுடிவிற்குவந்துவிட்டேன். உனக்குத்தெரிவிக்காமலேயே ஆண்களுக்கான கருத்தடைச் சிகிச்சையைச் செய்துகொண்டதுதவறுதான் என்றாலும் எமது செல்வங்களின் நலனுக்காக என்று எண்ணி என்னை மன்னித்துவிடு''.

அன்புள்ள மதன்.

எழில்பிறந்த இரண்டாவது மாதம் எழுதிய அந்தக்கடிதத்தைப் படித்துவிட்டு நான்கு ஆண்டுகட்குப் பின் எழுதிய மற்றொரு கடிதத்தைப் பிரித்தாள் அமரா.

''இதுவரை காலமும் என் மனைவியாக இருந்த அமராவிற்கு.. நீ தாயாகிவிட்ட சேதியைத் தாங்கிவந்த கடிதம் கண்டு திகைப்புற்றேன். நான் கருத்தடைச் சிகிச்சை செய்து இன்னும் மூன்றாண்டுகள்கூடச் செல்லவில்லை; அதற்குள் நீ தாயாகிவிட்டாய் என்றால்... உன் குழந்தையின் தந்தை யாராகஇருக்கவேண்டும்?நான் கருத்தடை செய்து கொண்ட பின் நீ தாயாவதென்றால்... உன்னை எப்படி என் மனைவி என்றுஅழைக்கமுடியும்? இதிலிருந்து உனது இரகசியத்தொடர்பு புரிகிறதல்லவா?இன்றோடு உனக்கும் எனக்கும் உள்ள உறவு அழிந்ததென்று எண்ணிக்கொள். மீதியை நீதிமன்றத்தில் பேசிக்கொள்வோம்.''

செவ்வந்தி ஜனித்துக் கொண்டபோது அமரா எழுதிய கடிதத்திற்கு, மதன் எழுதிய அந்தக் கடிதத்தைப் படித்தபோது அமராவின் உடல்-உள்ளம் எல்லாமேநடுங்கியது. இன்றோடு எத்தனை ஆயிரம் முறை அந்தக் கடிதத்தைப் படித்துப் புலம்பியிருப்பாள். பாவம், அவள் பெண். எந்தப்பெண்ணும் அஞ்சும்ஒரு பெரும்பழியைச் சுமந்துநிற்கும் ஒரு பேதை நடுங்காதிருக்கமுடியுமா? அந்தக்கடிதத்தை தன் மார்போடு அணைத்துக் கொண்டு அவள் கதறினாள். அதன் கதறல் அவனுக்குக் கேட்குமா, என்ன?

மதன் அமராவைக் கல்லூரி வாழ்க்கையிலிருந்தே காதலித்து மணம் முடித்துக் கொண்ட ஒரு பட்டதாரி ஆசிரியன். இப்பொழுது கண்டி மகாவித்தியாலயத்தின் அதிபர். செவ்வந்தி கருவாவதற்குச் சில மாதங்களின் முன்பாகத்தான் மாற்றலாகிக் கண்டிக்குச் சென்றிருந்தான். ஒரு நாளைக்கு அமராவை விட்டுப் பிரிந்திருப்பது என்றாலே அந்த நாள் நரகத்து வாழ்வாகத் தானிருக்கும். அந்த அளவிற்கு அமராவுடன் இணைபிரியாத இல்லறத்தில் திளைத்திருந்தவன். ஆனால் இன்று துருவ மீன்கள் போல அங்கொருவர் இங்கொருவராகி பிரிவின் பிடியிலே வீழ்ந்து உறவென்னும் சந்திக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு தனிமரமாக நிற்பதற்குத் துடித்துக்கொண்டிருப்பவன். அருளும், திருவும் பிறந்தபோது கருத்தடைசெய்துகொள்ள விரும்பினான் மதன். 'ஒரு பெண்குழந்தை பெற்றதும் செய்துகொள்ளலாமே அத்தான்' என்ற அமராவின் கெஞ்சுதலால் அன்று விட்டிருந்தான். ஆனால் அவர்கள் நினைத்ததற்கு மாறாக அடுத்த குழந்தையும் ஆணாகவே பிறந்ததனால் தனக்கு ஏனோ பெண் குழந்தை கிடைக்கப்போவதில்லை என்ற முடிவுக்கு வந்திருந்தான். அமராவிற்குச் சொல்வதால், இம்முறையும் கருத்தடைச் சிகிச்சை இப்பொழுதுதடைப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தால் அமராவிற்குத் தெரியாமலேயே ஆண்களுக்கான கருத்தடைச் சிகிச்சையை செய்துகொண்டான்.

சட்டம் பயிலும் ஆசையால் வசதிகருதி கொழும்பிற்கு மாற்றம்பெற்றுச் சென்றிருந்த காலம் அது. சட்டக்கல்வியைப் பகுதிநேரப் படிப்பாகத்தான் கற்றுக்கொண்டிருந்தான் மதன். அந்தக் காலம் அவன் வாழ்க்கையில் துரதிர்ஷ்டம் மிகுந்த காலம் போலும். அமராவின் தந்தை பாரிசவாத நோயால் பீடிக்கப்பட்டார். சோதனைமிகுந்த அக்காலத்தில் அமராவை தந்தையைக் கவனிக்கும் பொருட்டு யாழ்ப்பாணம் அனுப்பிவிட்டு தனிமையில் ஓரிரு மாதங்களை ஓட்டிக் கொண்டிருந்தான். அந்தப் பொல்லாத காலத்தில்தான் கருத்தடைச் சிகிச்சையையும் அவன் செய்வித்திருந்தான்.

ஜெயதேவரால் எதுவும் செய்யமுடியாதநிலை. அமராவின் பிரிவு மதனை வெகுவாக வரட்டி எடுத்தது. பிரிவின் தாக்கத்தால் சட்டக்கல்லூரிப் படிப்பையும் நிறுத்திவிட்டு ஓராண்டோடு யாழ்ப்பாணம் மீண்டும் மாற்றம்பெற்றுவந்தான் மதன். பிரிந்திருந்து சட்டக் கல்வியைத் தொடர முடியாத அவனுக்கு காலம், விதி என்ற போர்வையில் பிரித்துவைத்து வேடிக்கை பார்த்தது. கண்டி மகாவித்தியாலயத்திற்கு மாற்றம் வந்தது. இந்தப்பிரிவு அவன் வாழ்க்கையில் வந்திருக்கவே கூடாது. இந்த ஒன்றரை ஆண்டுக்குள்தான் மதனுக்கும் அமராவிற்கும் இடையே நீண்ட இந்தப்பிரிவு விவாகரத்து என்ற புதியதொரு நிலைக்கு நீதிமன்றம்வரை இழுத்துச்சென்றது.

●

பொழுது விடிந்தது.

அமரா நீதிமன்றத்திற்குப் புறப்பட்டாள். தோளிலே குழந்தை செவ்வந்தி நெஞ்சிலே தீராத சுமை. சலனமடைந்த விழிகள். மொத்தத்தில் துயரத்தின் பிம்பமாகத்தான் அவள் சென்றாள். செவ்வந்தியைப் பெறுவதற்குமுன் ஒரு தவணையின்போதுதான் மதனை அமரா பார்த்திருந்தாள். இன்று அவனைக் கண்டுகொள்வதில்கூட அவளுக்கு ஏதோ ஒரு நிறைவு கிடைத்துவிடும் என்ற ஏக்கம் வேறு. நீதிமன்றம் எங்கும் தன் விழிகளை மேயவிட்டு அவனைத்தேடினாள். மதன் அவள் கண்களிற் தட்டுப்படவேயில்லை.

அவர் வரவில்லைப்போலும். இன்றும் ஒருவேளை தவணை தானோ? அவள் சிந்தனையில் ஏக்கம் குடிபோந்தது. விழிகளை சற்று அப்பால் திருப்பினாள். வெளியே அட்வக்கேட் ஆறுமுகத்தோடு யார் யாரோ கூடிநிற்பது தெரிகிறது அவர் தானோ ? பார்த்துவிடுவோம் என்ற பரிதவிப்போடு வெளியே வந்தாள்.

'அமரா'—அட்வகேட் ஆறுமுகத்தின் அழைப்பு இது.

'அண்ணை...! கலங்கிய விழிகளோடு அவள் சென்றாள். அங்கே மதனும் இன்னும் சிலரும் கூடவே நின்றனர். அவள் விழிகள் ஒரே ஒரு முறைதான் மதனின்விழிகளைச் சந்தித்திருக்கும். மழைத்துளிகள் வீழ்ந்ததுபோல்கண்ணீர்த் துளிகள் சிதறி வீழ்ந்தன. ஓவென அழுது தீர்க்கவேண்டும்போல இருந்தது அமராவிற்கு. என்னசெய்வது, அவள் பெண்தானே, தன்னை எப்படியோ சுதாகரித்துக்கொண்டாள்.

ஆறுமுகம் அமராவை சற்று அப்பால் அழைத்துப் பேசினார். ''அமரா அவர் கேஸை விடப்போகிறாராம்.''

'என்ன...! உண்மைதானா...' அவள் திகைப்பின் விழிப்பு வார்த்தையில் இழையோடியது.

''அமரா... மதன்கூட நிற்கிறாரே. அவர்தான் டாக்டர் மதனன். மற்றக் கண்ணாடி அணிந்திருப்பவர் குடும்பத் திட்டப் பகுதி டாக்டர்!''

ஒரு முறை அவர்களைத் திரும்பிப்பார்த்த அமராவின் விழிகளிலே இனம்புரியாத ஓர் இன்ப நிறைவு.

'சென்றவாரம் லீவில் கொழும்பிற்குச்சென்ற மதனன் டாக்டரோடு மனம்விட்டுப் பேசினாராம். அவர்நிலைமைகளைத் தெளிவாக ஆராய்ந்திருக்கிறார். மதனின் உடலும் பரிசோதிக்கப்பட்டதாம். அப்போதுதான் மதன் பெற்ற சிகிச்சையின் உண்மைதெரிந்ததாம். ஆண்களுக்கான அறுவைச் சிகிச்சை மதனுக்குச் செய்யவில்லையாம். அறுவைச் சிகிச்சைக்குப்பதில் அறுக்கப்படவேண்டிய ரியூப் கட்டிவிடப்பட்டிருந்ததாம். கட்டு அறுந்ததால் கரு உண்டாகும் வாய்ப்பும் ஏற்பட்டுவிட்டது. அந்த ரியூப் அறுக்கப்பட்டால் நிச்சயமாகக் குழந்தையைப் பெறமுடியாதுதானாம். ஏதோ நீ செய்த பாக்கியம் அறுவைச் சிகிச்சைக்குப் பதில்கட்டுப்போட்டது.' – அட்வகேட் ஆறுமுகம் நடந்துபோன சம்பவங்களையும் மருத்துவ விளக்

(7-ம் பக்கம் பார்க்க)




## யார் உழவன்?

நிலம்:

மன்னுயிர் காக்க இங்கு
மட்டிலா அமுதம் வேண்டி
மண்தனைக் கீறி அங்கு
மணியினை முயன்று நாடி
கண்தனைக் காக்கு மந்த
இமை தனுக்கிணைந்ததாக
விண் என விளங்கு வீரன்
ஏர் உழவன் தானே!

நீர்:

அலைதனில் பாய்ந்தே சென்று
அள்ளியே கொண்டு சேர்க்க
விலையது மதிக்க வொண்ணா
உயிரதைக் கருத்திற்கொள்ள
கலை அது இதுவென்றாக உணவுகள்
முற்று மற்றும் வேண்டிய
நிலையது அளிக்கும் வீரன்
நீர் உழவன் தானே!

எழுத்து:

உணவினை உண்டு மற்றும்
உறங்கியே வாழ்ந்திடாது
மனதிலே மகிழ்ச்சி பொங்கி
மனிதனுய் உயர்ந்து நிற்க
நினைவிலே நிறைவு கண்டு
நிமூல கமைதி நாடி
கனவிலே காட்சி தேடும்
சீர் உழவன் தானே!

—ப. மகேந்திரதாசன்

## கலாயோகியின் வாழ்க்கையும் பணிகளும் -9

# அமெரிக்காவில் கலைப்பணியும் தத்துவ ஆராய்ச்சியும்

**ச. அம்பிகைபாகன்**

அமெரிக்காவிலிருந்து கொண்டு உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள கலை கலாச்சாரம் சம்பந்தமான சஞ்சிகைகளுடன் தொடர்புவைத்திருந்தார். பல்வேறு சஞ்சிகைகளுக்கும் வாழ்நாளில் நானூற்குமேற்பட்ட கட்டுரைகளும் புத்தக மதிப்புரைகளும் எழுதியுள்ளார். இவையெல்லாம் பொருள்பொதிந்தவையாகவும் புதுக்கருத்துக்கள்கொண்டவையாகவும் காணப்படுகின்றன. இவர் கட்டுரைகள் வெளிவந்த நாடுகள் இந்தியா, இலங்கை, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, பின்லண்ட், சுவீடின், போர்த்துக்கல், ருமேனியா முதலியனவையாகும். கலாயோகியின் 65-ம் ஆண்டு நிறைவையொட்டி இக்கட்டுரைகளின் விபரமான அட்டவணையொன்று ஆர்ஸ் இஸ்லாமிக்கா (Ars Islamica) என்னும் சஞ்சிகையில் வெளிவந்துள்ளது. மலேசியா வாசியான திரு. எல். துரைராசசிங்கமும் ஒரு அட்டவணையை தயாரித்துள்ளார். இலங்கையில் கலாயோகி வசித்த காலத்தில் பத்திரிகைகளுக்கு எழுதிய கடிதங்கள், கட்டுரைகளின் அட்டவணையை ஜேம்ஸ் கிறவுச் (James Crouch) என்னும் அவுஸ்திரேலியப் பேராசிரியர் தயாரித்து இலங்கை சரித்திர சமூகவியல் சம்பந்தமான சஞ்சிகையில் (The Ceylon Journal of Historical and Social studies -New series Vol. III No. 2) வெளியிட்டுள்ளார்.

இவர் இவ்வளவு பாரிய வேலைகளை எப்படிச் செய்து முடித்தாரென்ற கேள்வி எழுகின்றது. இதற்கு இவரை நன்கு அறிந்த ஓர் அமெரிக்கர் பின்வருமாறு விடையிறுத்துள்ளார். ''இவர் தம் வாழ்நாளில் இருவருடைய வேலையைச் செய்துள்ளார். இவர் நாள்தோறும் கடைப்பிடித்து வந்த ஒழுங்குமுறையே. எல்லோரும் வியப்படையத்தக்க அளவில் பிரமாண்டமான வேலைகளைச்செய்து முடிக்க முடிந்தது. காலை ஐந்தரை மணி தொடக்கம் ஒன்பது மணிவரைக்கும் அதாவது பொஸ்ரனுக்கு போகும்வரைக்கும் வீட்டில் படித்தல் எழுதுதல் செய்தார். கலைக்கூடத்தில் பிற்பகல் நாலரை மணிவரைக்கும் வேலைசெய்தார். மாலை வேளைகளில் காலநிலை இடங்கொடுத்தால் சிறிது நேரம் தோட்டத்தில் வேலை செய்வார். அது முடிந்ததும் இரவு பத்துமணிவரை படித்தல், எழுதுதல் முதலியவற்றில் ஈடுபட்டார்.''

இங்கு கலாயோகிக்கு தோட்டக்கலையிலிருந்தஈடுபாட்டைக் குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும். இவர் சிறு பையனாக இருந்தபொழுது தாயாருடனும், சிறிய தாயாருடனும் தோட்டவேலையில் ஈடுபட்டிருந்தார். சர்வகலாசாலையில் தாவர சாத்திரத்தை ஒரு பாடமாகக் கற்றார். பொஸ்ரன் நகரத்தில் சிறிது காலமிருந்த பின் அந்நகருக்கு அருகிலிருந்த நீட்காம் என்னும் நாட்டுப்புறத்தில் ஒரு வீட்டிலிருந்து வந்தார். அவ்வீட்டுக்கு அருகில் ஒரு தோட்டத்தை அமைத்திருந்தார். அந்தத் தோட்டத்தில் அரிய பூச்செடிகள் வளர்க்கப்பட்டன. சில செடிகளை கண்ணாடி அறைகளில் வைத்திருந்தபடியால் அவை காலநிலையால் தாக்கப்படாமல் எப்பொழுதும் பூத்துக்கொண்டிருக்கும்.

1927-ம் ஆண்டில் இந்திய கலை சம்பந்தமான ஒரு முக்கிய நூலை வெளியிட்டார். அது தான் ''இந்திய இந்தோனீசிய கலையின் சரித்திரம்'' என்பதேயாகும். இந்நூல் ஜெர்மன் மொழியிலும் ஆங்கிலத்திலும் ஒரே காலத்தில் வெளிவந்தது. இதில் இந்திய நாகரிகம், விசேடமாக இந்தியக் கலை, இலங்கை, பர்மா, சீயம், சுமத்திரா, ஜாவா, மலேசியா முதலியவிடங்களில் பரவிய வரலாற்றை கூறப்பட்டுள்ளது. ஆசிய நாகரிகத்திற்கு இந்தியாதான் ஊற்று (Soures) என்னும் கலாயோகியின் கூற்றை இந்நூல் நன்கு விளக்குகிறது. இந்நூலில் கொழும்பு பொன்னம்பலவாணேசுவரர் கோயிலைப்பற்றியும்குறிப்பிடப்பட்டிருக்கிறது. கலாயோகி தமது மைத்துனர் சேர் பொன்னம்பலம் இராமநாதனுக்கு இக்கோயில் கட்டப்படும் முறையைப்பற்றி விசாரித்தெழுதிய கடிதத்துக்கு அவர் எழுதிய விடை இங்கு இடம்பெற்றுள்ளது. (பக்கம் 125)

அமெரிக்காவில் ஹார்வர்ட், பிறின்ஸ்ரன் முதலிய சர்வகலாசாலைகளிலும், கலைக்கூடங்களிலும் காலத்துக்குக்காலம் இந்தியக்கலை, கலாச்சாரம், சமயம் முதலிய விஷயங்களைப் பற்றி கலாயோகி விசேஷ சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். அவை ''கலையில் இயற்கையின் திரிபு'' (The Transfornmation of nature in Art) -1935, கலைப் பொருட்களை காட்சிக்கு வைப்பதேன் (Why Exhibit works of Art) -1943, சொற் சித்திரமும் நினைவுச் சித்திரமும் (Figures of Speech and Figures of Thought)- 1946போன்ற நூல்களாகவெளிவந்தன. ''கலைப் பொருட்களைக் காட்சிக்கு வைப்பதேன்'' என்னும் கட்டுரையில் கலைக்கூடங்கள்பற்றிய சில முக்கிய விஷயங்களைக் கூறியுள்ளார். கலைக்கூடங்களில் காணப்படும் பொருள்கள் ஒரு காலத்தில் மக்களால் உபயோகிக்கப்பட்டவை. அவை வைக்கப்பட்டிருந்த இடங்கள் அழிந்து போகவே அவை பாதுகாப்புக்காக கலைக்கூடங்களில் வைக்கப்பட்டுள்ளன. கலைக்கூடங்களின் கடமை அவற்றைப் பாதுகாப்பதோடு மக்களுக்கு அவற்றைப்பற்றிய அறிவையும் புகட்டுவதாயிருக்கவேண்டும். அதனைச் செவ்வனே செய்வதற்குக் கலைக்கூடங்களில் வழிகாட்டிகளாகவிருப்போர் சரித்திரம், சமயம், சிற்பம் முதலிய துறைகளில் அறிவுடையவர்களாயிருக்க வேண்டும்.

கலாயோகி பலவிடங்களில் சொற்பொழிவுகளாற்றினார் எனக் கூறினோம். அச்சொற்பொழிவுகள்பற்றி மூவர்-ஒருவர் இந்தியர், இருவர் அமெரிக்கர் கூறியுள்ள அபிப்பிராயங்களை இங்கு தருகின்றேன். இப்பொழுது அண்ணாமலை சர்வகலாசாலையில் உபவேந்தராக இருக்கும் டாக்டர் சந்திரசேகரன் கூறியவை பின்வருமாறு: ''அவர் இந்தியக்கலை பற்றி ஆற்றிய சொற்பொழிவு பொருள்பொதிந்ததாயும் அறிவுபுகட்டுவதாயும், இந்தியாவின் பல பாகங்களையும் இடையிடையே குறிப்பிடுவதாயும் சமஸ்கிருத பதங்கள் இங்கும் அங்கும் கலந்ததாயுமிருந்தது. இந்தியரையும் இந்திய கலையோடு சம்பந்தப்பட்ட அமெரிக்கரையும் தவிர சபையிலிருந்த மற்றையோருக்கு அது அப்பாற்பட்டதாயிருந்தது. இளம் மாணவனாகவிருந்த எனக்கு இப்படியொருவர் இந்தியக் கலையை பற்றி அழகாக எடுத்துக் கூறுவதை எல்லோரும் அமைதியாகவும் கவனத்தோடும் கேட்பதைப் பார்க்க பெருமிதம் ஏற்பட்டது. அவர் கூறுவது தங்களுக்கு அப்பாற்பட்டதாயிருந்த போதிலும், அவர் நிறை கல்வியால் வசீகரிக்கப்பட்டிருந்தனர். கல்விமான்களுக்குரிய தேஜஸ் அவரிடம் காணப்பட்டது.''

அமெரிக்க மாணவர் ஒருவர் கூறியிருப்பது:- 1930ம் ஆண்டு கலைக் கூடத்தில் அவர் இந்தியக் கலை பற்றி நிகழ்த்திய தொடர் சொற்பொழிவுகளைக் கேட்டவர்கள் அந்த அனுபவத்தை மறக்கமாட்டார்கள். குறிப்பெடுக்க நாங்கள் அனுமதிக்கப்படவில்லை. முன்னரே அவை எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தன, அந்த இருட்டறையில், புளுக்கத்துக்கு மத்தியில் எங்கள் கவனம் ஒன்றன் பின் ஒன்றாகக் காட்டப்பட்ட சிற்பங்களால் ஈர்க்கப்பட்டது. சொற்பொழிவாளருடைய அமைதியான சாரீரமும் வார்த்தைகளும் எங்களை ஒரு புது உலகத்துக்கு அழைத்துச் சென்றன. அவர் கூறியது கலை பற்றிய விமர்சனம் போலல்லாமல் உபதேசமாயிருந்தது.''

ஒரு அமெரிக்க கலைஞர் கூறியிருப்பது:- ஒருமுறை அவருடைய பேச்சை பொஸ்ரனில் கேட்டேன். அவருடைய பேச்சு விஷயத்தோடு தொடர்புடையதாயும், கடின பிரயோகங்களல்லாததாயும் ரசிக்கக் கூடியதாயும் இருந்தது. அங்கிருந்த கல்விமான்களும், இந்திய சமூகத்ினரும் அவருடைய ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகக் கேட்டனர். இன்னுமொரு முறை அவருடைய பேச்சைக் கேட்டேன். அதுவும் கவர்ச்சிகரமாகவிருந்தது. அமெரிக்காவில் சிறந்த பத்துக் கட்டுரையாளர்களில் (Essayists) இவரும் ஒருவராகக் கணிக்கப்படுவதாக ஒரு சஞ்சிகையில்படித்தேன்.''

1930ம் ஆண்டு வரையில் சிந்துவெளிப் பள்ளத்தாக்கில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் பொஸ்ரன் கலைக்கூடத்தையும் பங்குபெறச் செய்தார் இதனால் கலைக்கூடத்துக்குச் சிந்துவெளி நாகரிகம் சம்பந்தமான 500க்கு மேற்பட்ட முத்திரைகளும் மட்பாண்டங்கள் முதலியனவும் கிடைத்தன.

கலாயோகி ஆங்கிலத்தில் ஒரு கவிஞராகவுமிருந்தார். இவர் எழுதிய கவிதைகளுக்கு இவருடைய நண்பர் எரிக்ஜில் (ERICGILL)என்பவர்எழுதிய சித்திரங்கள் அழகுக்கு அழகு ஊட்டுபவையாகக் காணப்படுகின்றன இவர் வரைதலிலும் ஓவியம் தீட்டுவதிலும் திறமை பெற்றிருந்தார். யக்ஷரைப் பற்றிய இவரின் நூலுக்கு இவரே திறம்பட சித்திரம் வரைந்துள்ளார்.

இலங்கை, இந்தியா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் இருந்த காலங்களில் கலாயோகி இந்திய சுதந்திர இயக்கத்தில் ஆர்வங்கொண்டிருந்ததை நாம் முன்பு கவனித்தோம். எழுத்தின் மூலமும் பேச்சின் மூலமும் தமது ஈடுபாட்டைக் காட்டினரொழிய நேரடியாக சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபடவில்லை. அப்படியிருந்தும் இங்கிலாந்தில் இருந்த காலத்தில் உலகப் பிரசித்திபெற்ற ஸ்கொற்லன்ட் யாட் இரகசியப் பொலிசார் இவரைக் கண்காணித்து வந்தனர். அமெரிக்காவுக்குப் போகவிருந்த சமயத்தில் இவரைப் பல கேள்விகள் கேட்டனர். இதனால் இவர் அமெரிக்காவுக்கு ஒரு சங்கீதக் கோஷ்டியுடன் போனதாகத் தெரிகிறது.

அமெரிக்காவிலிருந்துகொண்டும் இந்திய சுதந்திர இயக்கத்

(5ம் பக்கம் பார்க்க)

## வேண்டாமிவ் விழி நகரவாழ்க்கை

அன்றொருநாள் மாநகர வீதி தன்னில்
அயர்ந்தவன்போல் மெல்லெனவே நடந்துசென்றேன்
இன்னிசைசேர் பாடல்களின் ஓசைகேட்டேன்
உயர்ந்த பெருங்கோபுரங்கள் இங்குமங்கும்
பன்னிறத்த கவின்பொருட்கள் கடைகள் தோறும்
பலநாட்டா னெதிரெதிரே அழகுகாட்ட
கன்னலொடு தேம்பழங்கள் கதலியாவும்
கதையோடு விலைபோகக் கண்டேன்மாதே

விதிபல கண்ணெதிரே வலையின் யாப்பு
விளையாட்டாய் ஊர்திபல வங்குமிங்கும்
சேதிபல சொல்வனபோல் நாதமிட்டுச்
சென்றனவே அவை விலக்கிச் செல்லல்பாடு
மீதிவழி யாங்கணுமே பாதசாரி
மின்னெனவே சென்றிட்டார் இஃது உண்மை
ஆதியிலே பூமிதனை அவனேசெய்ய
அழகான நகர்தன்னை மனிதன் செய்தான்.

வாழ்வென்றால் பட்டினத்தார் வாழ்வு சொர்க்கம்
வருத்தியுடல் தினமாய்க்கும் வேலையில்லை
தாழ்வுற்று மெய்நலிதல் நாட்டார் வாழ்வு
தவறென்று சொன்னாலு மேற்கவேண்டும்
வாழ்வினைதான் இங்குள்ளோர்க் கில்லைப்போலும்
உரைப்பதற்கு ஏதுகுறை யுண்டு யாதுங்
கீழ் என்று சொல்வதற்குங் குறுக்கேநின்று
குறையில்லா நாகரிகம் தலைமை தாங்கும்

என்றுநான் பற்பலவாய் எண்ணியாங்கே
இயைந்திட்ட என்வேலைக் குடந்தையாகி
சென்றிட்டேன் காட்சிகளாற் செயலாற்றுன்றும்
சிற்பிகளின் அற்புதங்கள் மேலுங் கண்டேன்
வென்றிட்டான் ஈசனவன் என்னையிங்கு
விதந்துமுத லுரைத்த வைகள் யாவும் பொய்யாய்
மன்றிட்டுக் கூறியது போலே பின்னர்
மலைத்தேன்நான் கூறுவது முற்றுமுண்மை

வனந்தரத்தின் பைந்தரையிற் கூட்டம்போலே
வழியருகே நின்றோர்கள் எட்டிப்பார்த்தேன்
கதைத்தாறு சற்றுமுன்பு நினைத்ததெல்லாம்
கண்செத்து நாவுலர்ந்து களைப்புமுற்று
இனமாகச் சாவேற்க இயைந்த தொண்டன்
ஈரிரண்டு நாளாக உணவே காணு
விறைக்குறியின் அமைவினிலே யுடலைக் கண்டேன்
வேண்டாமிவ் விழிநகர வாழ்க்கை யென்றேன்.

— எழினி சி. சிவநாதபிள்ளை




## இலக்குத் தவறாதது ஷெல்ரொக்ஸ் சிகப்பு

எறும்பு, கரப்பொத்தான் முதலிய சகல பறக்கும், ஊரும் பூச்சிகளை நம்பிக்கையாகக் கொல்ல புதிய அதி சக்தி வாய்ந்த பூச்சிக் கொல்லியான, பேலேன் கொண்ட ஷெல்ரொக்ஸ் சிகப்பினைத் தருகிறோம்.

ஷெல்ரொக்ஸ் சிகப்பு சிக்கனமானது, நம்பிக்கையாகச் செயலாற்றுவது, நீண்ட நேரத் தாக்கமுடையது.

அலுமாரிகள், சாமான் அறைகள், வெடிப்புகள் முதலியவற்றில் ஷெல்ரொக்ஸ் அடியுங்கள்.

கரப்பொத்தான், எறும்பு வகைகள், இலையான், தெள்ளு, தேள் வகைகள், வெள்ளிமீன் முதலியவற்றை அழியுங்கள்.

புதிய சிகப்பு, வெள்ளை நிறத்திலான ஷெல்ரொக்ஸ் தெளிகருவியைப் பார்த்து வாங்குங்கள்.




GRANT KAB

# ஈழத்து இப்போதைய கவிஞர் வரிசை

## கவிஞர் கந்தவனத்தின் கவின்மிகு கவிதைகள்

இரசிகமணி கனகசெந்திநாதன்

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ" என்ற பாடலை மேல்வரிச் சட்டமாகக் கொண்டு ஒரு சில பழம் நூல்களையே படித்துவிட்டு மற்றவற்றைத் தொடாமலேயே இருக்கும் கற்றறிந்தோர் ஒரு சிலர் இந்நாட்டில் உள்ளனர். பிற்காலத்தில் எழுந்த சிறுகதை, நாடகம் ஆகியவற்றை மட்டுமே படித்துவிட்டு பழைய இலக்கியங்கள் எல்லாம் எமக்குப் பெரும் சுமையாக இருக்கின்றன என்று சொல்லித் திரிகின்ற புதுமை எழுத்தாளர்களும் காணப்படுகின்றனர். இவ்விருவகைப்பட்டவர்களுக்கும் பதில் சொல்வதைப் போல 'உங்களுக்கு ஆழமாகத் தெரியாத ஒன்றைப் பற்றி அபிப்பிராயம் சொல்லாதீர்கள் — பொய்படும் ஒன்றோ புனை பூணும் கையறியாப் பேதை வினைமேற் கொளின்' என்ற குறளை முன் வைக்கின்றார் வள்ளுவப் பெருந்தகை. இதையே பாரதியாரும் 'தாஜ்மகால் புதியது என்பதற்காக அதன் அழகைக் குறைத்து மதிப்பதில்லை; எங்கள் அப்பன் வெட்டிய கிணறு என்பதற்காக அதன் உப்புநீரை நாம் புகழ்ந்து குடிப்பதும் இல்லை' எனக் கூறியுள்ளார்.

இப்படியான ஒரு சமநோக்கை என்மனதில் வரித்துக்கொண்டு சென்ற முப்பத்தெட்டு வருடங்களாகப், பழையனவற்றைப் பற்றியும் புதியனவற்றைப் பற்றியும் படித்தறிந்து நான் இரசித்தவற்றை இரசிக உலகுக்கு அறிமுகம் செய்திருக்கிறேன். முக்கியமாக எங்கள்நாட்டுக் கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் அவர்தம் எழுத்துக்களையும் மக்கள்முன் வைத்திருக்கின்றேன். இவற்றை வெறும் இரசனை விமர்சனம் அல்லது கட்டுரைகளென எள்ளி நகையாடியோரும் இங்கு இருக்கின்றனர். இவர்களுக்குக் கலையைப் பற்றிய எண்ணப் பிறழ்வு இருப்பதாகவே நான் கருதுகின்றேன்.

கலை பொதுவாக அறிவுக் கலை என்றும் அழகுக் கலை என்றும் இருவகைப்படும். அறிவுக்கலை தந்தையைப் போன்றது. அழகுக் கலை தாயைப் போன்றது. அறிவுக்கலை வாழ்க்கைக்கு வசதிகளை வகுக்க, அழகுக்கலை இன்பத்தை வழங்குகின்றது. இன்பத்தை அடையச் செய்யும் எதுவும் இரசனையின் பாற்பட்டது. இலக்கியம், சங்கீதம், நாட்டியம், சிற்பம், ஓவியம் முதலாய கலைகள் இரசனையின் பாற்பட்டது. அவற்றில், சொல்பவனுக்கும் இரசனை பிறக்க வேண்டும். கேட்பவனையும் அதே இரசனையில் மூழ்கச் செய்தல் வேண்டும். இந்தத் திறமையுள்ளவனே இக்காலத்துக்குத் தேவைப்படுகின்றான்.

இந்த ரசானுபாவக் கொள்கையை விளக்க ஒரு பூவை எடுத்துக்கொள்வோம். ஒரு பூவை ஒரு விஞ்ஞானி பார்க்கிறான். அவனது கண்ணோட்டம் பூவை இதழ் இதழாகப் பிரித்து வகுத்துப் பார்க்கும் பகுத்தறிவும் பார்வையாகும். ஒரு தோட்டக்காரன் அதைப் பார்க்கின்றான். அவனுக்கு அதுவெறும் மலராகவே படுகின்றது. ஒரு அத்தர்செய்யும் வியாபாரி அதைக் காணும்போது அதிலிருந்து எவ்வளவு வாசனைத் தைலம் எடுக்கலாம் என்று யோசிக்கின்றான். ஒருபக்தன் அதைக் கண்டவுடன் 'வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர்' என்று எண்ணுகின்றான். ஒரு யோகியோ அதற்குள் கடவுள் இருப்பதாகவே எண்ணி அதனைப் பறிக்கவே தயங்குகின்றான். ஆனால் கலையுணர்வு படைத்த ஒரு கவிஞனோ பரவசமான நிலையில் மலரைப் பற்றி யாரும் சிந்திக்க முடியாத அளவுக்குக் கற்பனையில் மூழ்கிவிடுகின்றான். இதோ ஒரு கவிஞன் மலரைப் பார்க்கின்றான்:

> அள்ளற் பழனத்து
> அரக்காம்பல் வாய்நெகிழ
> வெள்ளம் தீப்பட்டதென
> வெரீஇ-புள்ளினந்தம்
> கைச்சிறகால் பார்ப்பொடுக்-
> கும் கவ்வை உடைத்தரோ
> நற்சிலைவேல் கோக்கோதை
> நாடு



இதில் பூக்கள் விரிந்த காட்சி புலவனுக்கு வெள்ளத்திலே தீப்பட்டதைப் போன்ற, இயற்கைக்கு மாறான காட்சியைக் கூடக் காட்டுகின்றது. நாமும் அவன் பாட்டில் மயங்கி நிற்கின்றோம். இதிலிருந்து மற்றவர் காணும் காட்சிக்கும் 'புலவன் காணும் காட்சிக்குமுள்ள பேதத்தைக் காண்கிறீர்கள். புலவன் காணும் காட்சியை நாமும் காணவேண்டுமானல் அவனது இரசானுபவத்தில நாமும் தோய்தல்வேண்டும்.

இந்த இரசானுபவத்தால் ஒழுக்கமும் பண்பாடும் கெடாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்கிறார் பண்டிதமணி. 'இரசத்தின் வெளிப்பாடே இலக்கியம் என்பர். இரசம்-சுவை. நற்பாத்திரங்களின் ஒழுக்கலாறுகளே சுவைக்கத் தக்கவை. இலக்கியங்களிலே அல்லாத பாத்திரங்களின் இயல்புகளை எடுத்து உருணிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. அச்சந்தர்ப்பங்களில் அந்தப் பாத்திரங்களைத் தீண்டாமல் நல்ல பாத்திரங்களின் போக்கு எப்படி இருக்கும் என்பதை சிந்திக்கவைத்துச் செல்வது இலக்கியத்தின் தனித்தமாண்பாயிருக்கும். ஒரு கூனியை, சகுனியை, கைகேயியைக் கட்டித் தழுவச் செய்வது புலமை ஆகாது.'' ''பரிசுத்த பாத்திரங்களின் தூய ஒழுக்கலாறுகளே சுவைக்கத்தக்கவை. அவை அன்பு செய்வதற்குரியவையாய் அமையும்போது அவற்றின் இலக்கிய எல்லையைக் கடந்ததாயிருக்கும்.'' இது கீழைநாட்டு விமர்சகர்களால் போற்றி வளர்க்கப்பட்டு வரும் ஒரு பண்பாகும். அவர்களுக்கு இந்தப்பண்பைக் கொடுத்தது கீழைநாட்டு இலக்கியங்களில் பேணப்படும் 'உயிர்களிடத்து அன்பு வேண்டும்' என்கின்ற பரந்த நோக்காகும்.

எமது நாட்டிலும் ஈழத்துப் பூதந்தேவனார் தொடங்கிப் புலவர்மணி சோ. இளமுருகனார்வரை பல கவிஞர்கள் இந்தப் பரந்த நோக்கத்தின் அடிப்படையில் அரிய பல படைப்புக்களைத் தந்துள்ளனர். அவர்களில் சிலர் சிவஞௌளிபாதம் போன்று பெருமைக்குரியவர்களாகவும் சிலர் குளிர்மை தரும் பகஞ்சோலைகளாவும் சிலர் சலசலவெனப் பாயும் அருவியைப் போன்றவர்களாகவும் சிலர் கீரிமலை நீரூற்றையொத்தவர்களாகவும் இருக்கின்றார்கள். இவர்களைப் போலவே இப்போதுள்ள ஈழத்துக். கவிஞர்களிலே ஒருசிலரும் காட்சிதருகின்றனர். எல்லோரையும் 'சமரச' நிலையில் நோக்காது அவரவர் திறமை எப்படிப்பட்டதென இனம் கண்டு மக்கள் முன் நிறுத்துவதும் அவர்கள் பாடல்களை இரசிக்கச்செய்வதும் இப்போது ஈழத்தில் இருக்கும்விமர்சகர்களுடையமுக்கியகடமையாகும். இந்த முக்கிய கடமைகளுள் முதலாவதாக, தன்படைப்பாற்றலால் முன்னணியிலே திகழ்பவரும் கவியரங்கங்களுக்கு ஓர் உயிர்ப்புக்கொடுத்தவரும் பல கவிதை நூல்களின் ஆசிரியருமாகிய கவிஞர் வி. கந்தவனம் அவர்களை வாசலிடைக் கொன்றை மரமாக நிறுத்தி, அது பூத்துக்குலுங்குகின்ற காட்சியை உங்களுக்குக் காட்டப்போகின்றேன்.

இதை வாசிக்கப்போகும் நண்பர்கள் கவிஞர் கந்தவனத்தைப்பற்றி முன்னரே அறிந்திருப்பார்கள் என்றே நம்புகிறேன். ஏனெனில் இப்போதுள்ள கவிஞர்களில் கவிஞர் கந்தவனம் அவர்களின் பெயர் மிகவும் பிரபலியமானது. எனினும் அவரது கவிதைகள் இதுவரை முறையாக மதிப்பீடு செய்யப்படவில்லை. ஆதலால் ஒரு முக்கியபணியாகநினைத்தே நான் இதைச்செய்கின்றேன்.

பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் தேசிகவிநாயகம்பிள்ளைக்கும் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரத்துக்கும்நாமக்கல்கவிஞருக்கும் சோமுவுக்கும் எழுதியிருக்கும் விமர்சனங்களை வாசித்து இரசித்த உங்களை எங்கள் நாட்டுக் கவிஞர்களும் என்ன செய்திருக்கிறார்கள் என்று ஒரு கணம் சிந்திக்கத் தூண்டுவதும் இவ்வெழுத்தின் நோக்கமாகும்.

ஏற்கனவே நவாலியூர் சோமசுந்தரம் அவர்களைப்பற்றியும் (திறவாத படலை) பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் தமிழ்ப்பணிபற்றியும் (மூன்றாவது கண்) செந்தமிழ்மணி பொ. கிருஷ்ணபிள்ளையைப் பற்றியும், அல்வாயூர்க் கவிஞர் செல்லையா அவர்களைப் பற்றியும் (கவிதை வானில் ஓர் வளர்பிறை) அம்பிப் பாடலைப்பற்றியும் விமர்சன ரீதியில் நூல்களும் கட்டுரைகளும் எழுதியிருக்கிறேன். இந்த வரிசையை அடுத்து கவிஞர் கந்தவனத்தைச் சந்திக்கப் போகிறீர்கள். இதோ அடுத்த வாரம் 'பளிங்கனைய கவிக்கரசன் கம்பன் என்னும்தேவனை'க் கிரிமலையினிலே கவிஞர் கந்தவனம் சந்தித்த காட்சியைக் காண்போம்.

---

ஆவியுலகத் தொடர்புகள்—14

# கடிதம் எழுதிய மாணவனின் ஆவி

வி. ரவிச்சந்திரன்

தென்னிந்தியாவில் தஞ்சை மாவட்டத்தில் திருவாரூருக்குக் கிழக்கே எட்டு மைல் தொலைவில் உள்ளது கிவளூர் என்றழைக்கப்படும் கீழ்வேளூர் கிராமம். இவ்வூரில் வசிக்கும் கோபாலகிருஷ்ணன்-சுப்பிரமணியம் என்றஇரண்டு நண்பர்கள் சிறந்த மீடியங்களாக உள்ளனர். தென்னாற்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூரில் இருந்து மாயூரத்திற்கு தினமும் ரயிலில சென்று ஏ. வி. சி கல்லூரியில் படித்து வந்தார் ரவி என்ற மாணவர் ஒருநாள் வழக்கம் போல் கல்லூரி சென்றவர் இரவு வீடு திரும்பவில்லை. சில தினங்கள் கழித்து வீட்டினருக்கு ஒரு தகவல் கிடைத்தது. ரயில் பாதை ஓரம் உருச்சிதைந்து கிடந்த ஒரு மனித உடல் பொலிசாரால் சவக்கிடங்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று அறிந்தனர். அந்த உடல் ரவியினுடையதே என்று காலங்கடந்து அறிந்த பெற்றோர் கதறினர்.

இச்செய்தியைப் பத்திரிகைகளில் படித்து அறிந்த கீழ்வேளூர் நண்பர்கள் அந்த மாணவரின் ஆவியை அழைத்துப் பேசினார்கள். அந்தமாணவர் தன்னுடைய மரணத்தினால் வீட்டினர் மிகவும் வருத்தமாக இருப்பதாகவும் தனது வீட்டாருக்குத் தான் கடிதம் எழுத விரும்புவதாயும் கூறினார். கடிதம் வாங்கிவந்தனர். அந்த மாணவரின் ஆவி மீடியத்தின் கைமூலம் தன்தந்தையான கடலூரில் இருக்கும் ஓய்வுபெற்ற நீதிபதி முராரி அவர்களுக்கு தன்னைச் சந்திக்க வரும்படி கடிதம் எழுதியது. வீட்டு விலாசம் உட்பட எல்லாமே அந்த ஆவியால் எழுதப்பட்டது. கடிதம் கிடைத்ததும் முராரி குடும்பத்தினர் கீழ்வேளூர் வந்தனர். பேசுவது தங்கள் மகன்தானா என்று உறுதிப்படுத்திக்கொள்ள குடும்பச் சம்பந்தப்பட்ட சில நிகழ்ச்சிகளைக் கேட்டனர். கிடைத்த பதில் அவர்களைத் திருப்திக்குள்ளாக்கியது. மாணவரின் மரணம் எப்படி ஏற்பட்டது என்ற விபரம் யாருக்கும் புரியாமல் இருந்தது. அதை அந்த மாணவரே விளக்கினார் கல்லூரி முடிந்து வழமைபோல் ரயிலில் வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். ரயில் பெட்டியில் அமைந்திருந்த மலசல அறைக்குப் போய் விட்டு வந்து ரயிலின் வாயிற்படியில் வந்து நின்றேன். நான் பிரயாணம் செய்த பெட்டியின்கதவு திறந்தவுடன் தானாக மூடிக்கொள்ளும் தன்மையில் ஏதோ கோளாறாக இருந்தது. நான் அதை அறியாமல் வண்டி ஓடும் போது வாயிற்படியில் நின்றேன்' கதவு பின்புறமாக வந்து என்மேல் மோதியது நான் நிலைதடுமாறி வெளியில் வந்து விழுந்து விட்டேன், அது இரவு நேரமானதால் யாரும் கவனிக்க வாய்ப்பு இல்லை என்று விளக்கிய மாணவரின் ஆவி வெகு நேரம் வரை தன் பெற்றோருடன் பேசிஅவர்களுக்கு ஆறுதலை அளித்தது.

---

## அமெரிக்காவில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு உதவி செய்து வந்தார், இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் நல்லுறவை வளர்ப்பதற்காக 1924ம்ஆண்டில் நியூயோர்க் நகரில் நிறுவப்பட்ட தாபனத்துக்கு தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இரண்டாவது யுத்த காலத்தில் இந்திய சுதந்திரத்துக்காக உழைக்கும் பொருட்டு அமெரிக்காவில் தேசிய ரீதியில் அமைக்கப்பட்ட சபைக்கு கலாயோகி தலைவராக நியமிக்கப் பட்டார். இந்திய சுதந்திர இயக்கத்துக்கு ஆதரவாகவும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அடக்கு முறையைக் கண்டித்தும் அமெரிக்க பத்திரிகைகளுக்கு பல கடிதங்கள் எழுதினார் 1947ம் ஆண்டில் அமெரிக்காவில் நடைபெற்ற இந்திய சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் பெரும்பங்கெடுத்தார்.

[இன்னும் வரும்]

---

## மாற்றம் ஒன்று தேவை

சாதிச் சண்டை ஏனோ - நாமும்
பாதி மனிதர் தாமோ
வாதமின்னும் ஏனோ - நாங்கள்
வாழவேண்டு மன்றோ.

உண்மை உழைப்பை நாளும் - இந்த
உலகம் போற்ற வேண்டும்
பொய்மை மனிதர் வாழ்வை - இந்தப்
பூமி உதற வேண்டும்.

கோடி சீமான் என்றல் -அவன்
குருதி வெள்ளையாமோ
கோடி தானு மில்லா - ஏழைக்
குருதி கரியதாமோ.

ஆற்றல் போற்ற வேண்டும் - நல்ல
அன்பைப் போற்ற வேண்டும்
மாற்றம் ஒன்று தேவை - சாதி
மறைதல் இன்று தேவை.

—என். ரி. ஜெகன்

# கோலாலம்பூரில் கொடிகட்டி இரும்புகிறர் இந்த இளம் பாடகி

''மட்டுநகர் வாவியிலே கொட்டமிடும் மீனினங்காள் தொட்டணைக்கும் வேலனுக்கு தூதுசொல்லமாட்டீரா''

இனியகுரல்-இன்பகீதம்-சுழன்றெழுந்தது கோலாலம்பூர் நகரமண்டபத்தில்-கேட்டவர் பரவசமாயினர். எந்த ஊர் என்ஊர். ஈழம்தான் என் கையிலே ஈழமாதா ஆனந்தப் புன்னகை புரிந்தாள்.

ஆம்! ஈழத்து இன்னிசை வானின் இளம்கலைரை-குமாரி. சிவசக்தி சிவப்பிரகாசபிள்ளையின் இன்னிசைக் கச்சேரி கடந்த 2ம் திகதி புதன்கிழமை மாலை எட்டு மணிக்கு கோலாலம்பூர் திவான்பந்திராயாநகர மண்டபத்தில் இடம்பெற்றது. இருபதும் ஆகாத இவ் இளம் கலைஞரின் மூன்றரை மணி நேர இவ் இன்னிசை நிகழ்ச்சி ஈழத்தமிழிசை உலகுக்கு நிலையான புகழைஈட்டிக்கொடுத்த தென்றால் எள்ளளவும் மிகையாகாது.

இன்னிசை வெள்ளம் பெருகிப் பாய்ந்தது. சுத்ததாள லயத்தோடு இனியகுரலுடன் கலந்தெழுந்த கானத்திலே நேரத்தைமறந்து காத்திருந்தார்கள் பல நூற்றுக்கணக்கான இரசிகர்கள். சங்கீதம் தெரியாதவர்கள்கூட சிவகுமாரியின் கச்சேரியில் சிந்தைமறந்திருந்தனர்.

''தந்தை கைக்கனி பெற கந்தமயிலோனே'' என்னும் பாடல் குமாரியின் கனிந்த குரலுடன் கலந்து கருத்தைக் கவர்ந்தது. ''மந்தைகள்மேய்த்திடும் கண்ணன்'' இசைப்பிரியர்களை மந்தைகள்போல் மேயவைக்கும் அற்புத சக்தியைப் பெற்றது. ''முருகா முருகா முருகா, கொஞ்சிக் கொஞ்சி வாருகனே'' பாடல்கள் இரசிகர்களை இசையுலகின் இன்பத்தை துய்த்திட வாவா என அழைத்தது. மொத்தத்தில் அவரது இசைக் கச்சேரியைக் கேட்டு ஆடாததலைகளே அங்கு இருக்கவில்லையென்று துணிந்து கூறலாம்.

கச்சேரிமுடிவில் இரசிகர்கள் சார்பாக-சங்கீதசபாத் தலைவர் டி. பீ. பி. திரு. டி. எஸ். சம்பந்தமூர்த்தி பொற்பதக்கம் ஒன்றை அவருக்கு வழங்கினர். அன்னாரின் பாரியார் கலைஞர்களுக்கு மலர்மாலை அணிவித்து தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். ''கலை இறைவன் அளிக்கும் கொடை. சிவன் ஆடலரசன். சக்தி கலைகளின் தேவி. எனவே கலையின் சிகரமாகத் திகழும் குமாரிக்கு சிவசக்தி எனப் பெயர் வைத்தது சாலப் பொருத்தமே'' என சபாச்செயலாளர் திரு.சி.நாகலிங்கம் பாராட்டிப் பேசினர்.

இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சில்கடமையாற்றும் திரு. சி. சிவப்பிரகாசம்-இராமநாதன்கல்லூரிபுவியியல் விரிவுரையாளர் திருமதி அங்கையற்கண்ணி தம்பதிகளின் மூத்தபுதல்வியாக பிறந்தவர். குமாரி சிவசக்தி 5 வயதிலேயே சங்கீதபூஷணம் சிறி என். சண்முகரத்தினத்திடம் குமாரி முறைப்படி சங்கீதம் பயிலத் தொடங்கினர். அவரது இசை ஆற்றலுக்கு இராமநாதன் கல்லூரி இசையாசிரியர்கள் சித்தார் சுப்பிரமணியம்பிள்ளை, கல்யாண கிருஷ்ணபாகவதர் ஆகியோர் மேலும்மெருகூட்டினர். யாழ்ப்பாணம் வீரமணி ஐயரிடம் பரதம் பயின்று பிரபல வீணை வித்துவான் எஸ். பாலசந்தர் தலைமையில் அரங்கேற்றமும் செய்தார்? பின்னர்

ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு ஐந்துசந்தி அரங்கிலே நிகழ்ந்த இஸ்லாமிய பக்தி இசை நிகழ்ச்சியில் நின்றிருந்தேன். ''தென்றல் காற்றே கொஞ்சம் நில் எங்கள் திரு. நபியிடம் போய்ச் சொல்'' காற்றினிலே எழுந்த இசைவெள்ளம் நெஞ்சத்தைக் கொள்ளைகொண்டது. இனிய குரல் - இனிய பாடல். மேடையை நோக்கி பார்வை திரும்பியது. ஈழத்தின் பிரபல பொப் இசைப்பாடகர் ரமேஷ் வைகுந்தநாதன் தென்னிந்திய இஸ்லாமிய பாடகர் நாகூர் ஹனிபாவைப் போன்று அதே குரலில் அதே பாடல்களைப்பாடிக்கொண்டிருந்தார். இவரது இசையில் மயங்கிய இரசிகர்கூட்டம் 'ஈழத்து ஹனிபா' என தம்முள் பாராட்டி மகிழ்ந்துகொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில்

பாரதம் சென்று 4 வருடங்கள் சென்னை இசைக்கல்லூரியில் பயின்று சங்கீதத்தில் பல பட்டங்கள் பெற்றதுடன் தனிப்பட்ட முறையிலும் பல பிரபல்யமானசங்கீதக்கலைஞர்களிடம் பயிற்சியும் பெற்ஞர்.

கோலாலம்பூரில் நன்றிதெரிவித்துப்பேசிய குமாரி சிவசக்தி தமது உரையில், ''மெல்லிசையாக எல்லாரும் பாடலாம். எனக்கு இசை கற்பித்த பெரியவர்கள் கச்சேரி முறைப்படி பாடவேண்டுமெனப் போதித்துள்ளனர். கர்நாடக இசை காலம்காலமாக நம்முன்னேர் வழிவந்தது அதனைக் காப்பது நமது கடமை. மக்கள் இரசனைக்காக அதனை மாற்றக்கூடாது'' என்ருர்.

குமாரி சிவசக்தியின் இன்னிசை நிகழ்ச்சி வெகுவிரைவில் யாழ்ப்பாண இசைப்பிரியர்களுக்கும்கிட்டவிருக்கிறது. இவ்வரிய வாய்ப்பை யாழ். இசைப்பிரியர்கள் ஆவலுடன் வரவேற்பார்கள் என்பது உறுதி.

—'பற்றிமாகரன்'

# ரமேஷ் வைகுந்தநாதனுக்கு முஸ்லிம் ரசிகர்கள் பாராட்டு

இத்தகையஇஸ்லாமிய பக்தி இசை நிகழ்ச்சியை முதன்முதல் நடாத்திக்காட்டியுள்ளவர் இவரே.

ரமேஷ் வைகுந்தநாதன் பொப் இசை உலகில் எம். எஸ். என இரசிகர்களால் செல்லமாக அழைக்கப்படும் சிறந்த இசைக்கலைஞர். இவரின் இசையில் இதயம் இழந்த இரசிகர்கள் பொப் இசை அரசு, நடிப்பிசை வேந்தன், கவர்ச்சிப் பாடகர், மக்கள் பாடகர் என பல பட்டங்கள் சூட்டி மகிழ்ந்துள்ளனர். இவரின் பட்டங்களின் வரிசையிலே 'இஸ்லாமிய மார்க்க பக்தி இசைப்பாடல் சக்கரவர்த்தி' என்னும் பட்டமும் கூடியுள்ளது. இஸ்லாம்மேல் மிகுந்த பக்தியும் இஸ்லாமிய சகோதரர்களின் சிறந்த அன்பணைவும் திகழும் இவருக்கு இப்பட்டம் சாலப்பொருத்தமானதே.

இலங்கை வானொலியில் மட்டுமல்ல இந்திய வானொலியிலும் இவரின் நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. அரபு-இஸ்லாம் பாடகராக மாறியுள்ள முதல் தமிழ் பாடகர் என்னும் பெருமையும் இவரை வந்தடைகிறது. (சி)

## வானொலியில் இன்று 'குளறி கந்தையா'

'புலுகர் பொன்னையா,' 'அசட்டு மாப்பிள்ளை' போன்ற நகைச்சுவை நாடகங்களை எழுதி மேடையிலும் வானொலியிலும் புகழ் ஈட்டிய எஸ். எஸ். கணேசபிள்ளை (வரணியூரான்) மற்றும் ஒரு புதிய நகைச்சுவை நாடகமான 'குளறி கந்தையா'வை எழுதியுள்ளார். எஸ். பி. சாமி அன் கொம்பனியின்ஆதரவில்இன்று மாலை 3-45 மணி தொடக்கம் 4-00மணிவரை வர்த்தகசேவையில் ஒலிபரப்பாகின்றது 'குளறி கந்தையா'. இந்த நாடகத்தை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 3-45க்கு நேயர்கள் கேட்கலாம். பி. விக்னேஸ்வரன் தயாரிக்கும் இந்த நாடகத்தில் எஸ். எஸ். கணேசபிள்ளை, ராஜேஸ்வரி சண்முகம், கே. எஸ். பாலச்சந்திரன், எஸ். கே. தர்மலிங்கம், சாமினி ஜெயசிங்கம், எஸ். ஜேசுரத்தினம், கே. கந்தசாமி ஆகியோர் நடிக்கிருர்கள்.

## எண்ணிலே வாழ்வு—5

# எதையும் தாங்கும் இதயம் கொண்டவர் நாலுக்காரர்

எண்களிலே நான்காவது எண்முக்கியத்துவம்வாய்ந்தது ஜோதிட ரீதியில் ராகு, கேதுக்கள் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றனவோ, அதைப் போலவே நாலு எண்காரர்களும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். மேலைநாடுகளில் நாலு எண்ணைக்கண்டு அஞ்சுவதும் உண்டு. ஹோட்டல்கள், குதிரைப்பந்தய ஆட்டங்கள். சூது விளையாட்டுக்களில், நாலு எண் முக்கியத்துவம் பெறுவதில்லை நான்கைப்போல கொடுப்பவனுமில்லை, கெடுப்பவனுமில்லை என்று சொல்வார்கள்.

நான்கு எண்காரர்களது வாழ்வை ஆராய்ந்தால் தோல்விகளினல் இவர்கள் மனம், எதையும் தாங்கும் இதயமாக மாறிவிடுவதைக் காணலாம்.

### உயர்நிலை அடைபவர்:

பொதுவாக நாலு எண்காரர் எங்கும் உயர்நிலையடைந்து வந்திருக்கிருர்கள். இவர்கள் சொந்த முயற்சியினல் தமது உழைப்பின் பயனுய், உயர்நிலையடைந்து விடுவர். தந்தை அமரர் செல்வநாயகம், தலைவர் வன்னியசிங்கம், காசிஆனந்தன் போன்றவர்கள் நாலு எண்ணில் பிறந்தவர்கள் இவர்களது வாழ்க்கை போராட்டம் நிறைந்ததாக இருந்தாலும், இனத்திற்காக சேவைசெய்துஉயர்நிலையடைந்தவர்கள். நாலு எண்காரர் எத்தொழிலில் இருப்பினும் உயர்நிலையை தாமாகவே அடைந்துவந்திருக்கிருர்கள்.

### ★ அண்ணன் ★

நீதி, நேர்மை இவர்களிடம் இருக்கும். புதுமையாகப் பேசவேண்டும், எழுதவேண்டும் என எண்ணுபவர்கள். ஆனல் செயலில் காட்டத் தயங்குவார்கள் சுயநலம்மிக்கவர்கள். பிறரைப்பற்றி பரிந்துரை பேசுவதில் காலத்தைக் கழிப்பவர். செயலில் மந்த கதியில் இயங்குவர். எவருடனும் இடம், பொருள், ஏவல் அறியாமல் தமது அறிவின்

(7-ம் பக்கம் பார்க்க)

## மும்மொழித் திட்டம்

# மெய்யான தீர்வல்ல; கற்பனவாதம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

### கல்வித்திட்டமா, சமூக அமைப்பா?

கல்வித்திட்டம், சமூக அமைப்புஎன்பனவற்றில் பெருமாற்றங்கள் ஏற்படவேண்டும் என்பது உண்மை. ஆனல், இவையிரண்டுள் எது முதலில் ஏற்படவேண்டும் என்பது சிந்திக்கப்படவேண்டியது' கல்வித்திட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் சமூக அமைப்பினையும் சமூக உறவுகளையும் மாற்றியமைக்கும் என்பது வெறும் கனவு. கற்பனைவாதம். சமூக அமைப்பில் ஏற்படும் மாற்றங்களே சமூக உறவுகளையும் கல்வித் திட்டத்தையும் மாற்றியமைக்கவேண்டும்.

சமூக அமைப்பு எவ்வாறு மாற்மடையவேண்டும்? இன்றைய சமூக அமைப்பின்கீழ் பணக்காரன் மேலும் பணக்காரன் ஆகிருன். ஏழைமேலும் ஏழையாகிருன். சமூகமேல்மட்டத்திலுள்ளவர்களின் பிள்ளைகள் பெரியபெரிய கல்லூரிகளில் கல்விகற்க வசதிகள் கிடைக்கின்றன ஏழைத்தொழிலாளியின் மக்கள் ஏழை விவசாயியின் மக்கள் கிராமப்புறத்துப் பாடசாலைகளில் தான் எழுத வாசிக்கப் படிக்க வேண்டியுள்ளது. இக் கிராமப்புறத்துப் பாடசாலைகளுக்கு நல்ல தகைமைபெற்ற ஆசிரியர்கள் அனுப்பப்படுவதில்லை. அனுப்பப்பட்டாலும் குறுகிய காலத்துக்குமேல் அவர்கள் அங்கு தங்கியிருப்பதில்லை.

சமூக மேல்மட்டத்திலுள்ளவர்கள் சங்கக்கடைகளிலும், அரசாங்கக் காரியாலயங்களிலும் தேவையானவற்றைச் சிரமமின்றிப்பெற்றுக்கொள்ள முடிகிறது. வசதியற்றவர்கள் அத்தியாவசிய உணவுப் பண்டங்களையே பெற்றுக்கொள்ள முடிவதில்லை. பண்டங்களைப் பதுக்கிவைக்கும் வியாபாரிகள் ''இரண்டுநாள் றெயில்வே வேலை நிறுத்தம் வராதா?'' என்று கர்ப்பூரங்கொளுத்துகிருர்கள்.

'ஜகன்'

சுருங்கச் சொன்னல், தமிழனே தமிழனைச் சுரண்டும் நிலைதான் இன்றைய சமூக அமைப்பினைப் பிரதிநிதித்துவப்படுத்திக் காட்டுகிறது. இவ்வாறே மற்றைய இன மக்களிடையேயும் ஏற்றத் தாழ்வுகளும் சுரண்டல்களும் நிலவுகின்றன.

இத்தகைய சமூக அமைப்பினை மும்மொழிக் கல்வித் திட்டம் தகர்த்தெறியுமா?

### தேசிய அரசியல் இயக்கம்

உண்மையில், ஊழல் நிறைந்த இன்றைய சமூக அமைப்பினை அரசியல் ரீதியில் உடைத்தெறிந்து, இன-மத-மொழி பேதமற்ற ஒரு சமூகத்தை உருவாக்கவேண்டும். இவ்வாஞன சமூகத்தை உருவாக்கும் செயற்பாட்டிலேயே ஒருமைப்பாடு இரண்டறக் கலந்திருக்கும் ஆதலின், பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் வேறெங்கோ இருக்கின்றன. அது தேசிய ரீதியிலான ஓர் அரசியல் இயக்கத்தினுலேதான் சாதிக்கப்படக்கூடியது என்பதை மட்டும் இங்கு வலியுறுத்திக் குறிப்பிடவேண்டும்.

இந்நிலையில் மும்மொழிக் கல்வித்திட்டம் பிரச்னையைத் தீர்க்கும் எனக் கருதுவது வெறும் கனவு என்பது மட்டுமல்ல, இதனை முன்வைப்பதும் ஒரு கண்துடைப்பாகவே இருக்கமுடியும்.

இத்திட்டம், சிங்கள- தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஓரளவு தேர்ச்சி பெற்றுத் தராதரப்பத்திரம் பெற்றவரும், வேலையற்றிருப்போருமாகிய படித்த ஒரு தொகை வாலிபருக்கு வேலை வழங்க உதவும். அரசியலை மேலெழுந்தவாரியாக நோக்குவோருக்கு இது குறித்த பிரச்னைக்கு ஓரளவு தீர்வுபோலத் தோன்றுமேயன்றி உண்மையான தீர்வாகாது.

ஆயினும் இனப் பிரச்னை தீர்ந்ததொரு நிலையிலே, மும்மொழிக் கல்வித்திட்டம் சிங்கள - தமிழ் மக்களிடையே ஏற்படும் ஐக்கியத்தை மேலும் உறுதிப்படுத்த உதவும் என்பதை ஏற்றுக்கொள்ள எவரும் தயங்கவேண்டியதில்லை.

''எல்லோரும் இந்நாட்டு மன்னர்; நாம் எல்லோரும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே'' என்ற நிலையை ஏற்படுத்தும் ஒரு திட்டமே மெய்யான தீர்வைத் தரும்.




நூல்: 'சமுதாயப் பிரச்சினைகள்' (கட்டுரைத் தொகுதி) ஆசிரியர்: திரு. மு. பரமநாதன், சந்தன்புளியடி, காரைநகர். ஒரு பிரதியின் விலை: ரூ. 1/50.

''தாழ்வுற்று வறுமைமிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்ட'' நிலையிலுள்ள ஈழத்தமிழ்ச் சமுதாயத்தைப் பீடித்துள்ள பிணி போன்ற பிரச்னைகள் பல. அவற்றுள் புற்றுநோய்போல தமிழ்ச் சமுதாயத்தின் நாடி நரம்புகளையே உருக்குலைக்கும் முக்கிய பிரச்சினைகளாகிய சாதிவெறி, சிங்களமொழி ஆதிபத்தியம், சீதனக்கொடுமைபற்றியும், வேறு சில பிரச்னைகள் பற்றியும் வாசிப்போருடைய சிந்தனையைத் தூண்டும் வகையில் அன்பர் பரமநாதன் அவர்கள் தமது தெளிந்த கருத்துக்களை தமக்கே உரிய நடையில் கட்டுரை வடிவில் தந்து நூலாக வெளியிட்டுள்ளார்.

காகித விலை ஏற்றம், அச்சுக்கூலி உயர்வுபோன்ற பலபிரச்னைகளிடையே நூலைத் துணிந்து வெளியிட்டமைக்கு அன்பர் பரமநாதன் அவர்களைப் பாராட்டவேண்டும்.

தமிழ்ச் சமுதாயத்தில் அக்கறையுள்ள அனைவரும் நூலை வாங்கிப் படித்து ஊக்கம் கொடுத்தால்தான் நூலாசிரியர் மேலும் பல நூல்களை வெளியிடும் உற்சாகத்தைப் பெறுவார். எனவே தமிழன்பர்கள் அனைவரும் நூலை வாங்கிப் -படிப்பது நன்று.

''கரவை கிழார்''

RIO (Jaffna) Daily 10-30 4-45 7-15&9-45 P. M.

Special school shows at 1-30 P. M. by prior arrangement.

A story beloved by children of all ages for over half a century, Now a masterpiece in film industry

THE RAILWAY CHILDREN

(Wonderful Family Entertainment)

Regal (Jaffna)
Daily at 4-45 7 & 9-30 P. M. only
LEX BARKER in

Fury Of The Sabers

[Color Scope]

கடைசி வாரம்
ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்

பெண் தெய்வம்

8-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா கே. ஆர். விஜயா
நடித்த

தசாவதாரம்

(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)
[பாடசாலை மாணவர்கள் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்]

மனோஹரா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா
நடிக்கும்
சுஜாதாவின்

உனக்காக நான்

(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

றியோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
(யாழ்.நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி.... பானுமதி....
பாலையா.... தங்கவேலு....
நடித்த
அம்பிகாபதி

# சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தையும் சொல்லிவிட்டுச் சிரித்தார்.

அவள் வாய் திறந்து வார்த்தைகளைப் பேசமுடியாது இன்ப நிறைவில் திளைத்தாள். 'நான் நிரபராதி... மாசற்றவள் என்பதை அவர் ஏற்றுக்கொண்டால் அதுபோதும் எனக்கு'-என்று அவள் இதயம் பேசிக்கொண்டது.

ஆறுமுகம் மதனை அழைத்தார். அவர் குரலில் கனிவு நிறைந்திருந்தது.

மதன் அமராவின் தோளில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தை செவ்வந்தியைப்பெற்றுக்கொண்டான். டாக்டர் மதனும் குடும்பத்திட்ட டாக்டரும் அமராவை தேறுதல் வார்த்தைகள் கூறி மதன் சார்பில் மன்னிப்புக்கேட்டனர்.

அமராவால்எதையுமே வாய் விட்டுப் பேசமுடியவில்லை. அவள் இதயம் ஆனந்த சாகரத்தில் மூழ்கித்திளைத்துக்கொண்டிருந்தது.

நீதிமன்றத்தில் இருவரும் இணைந்துபோவதாகவும், டாக்டரின் விளக்கத்தையும்விளக்கி அட்வகேட்ஆறுமுகம் வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டார்.

அமரா... மதனின் இதயம் பரிதாபமாக ஒலித்துக்கொண்டது. அவள் வார்த்தைகளின்றியே விழிகளால் பேசிவிட்டுக் கொல்லெனச் சிரித்தாள். அந்தச் சிரிப்போடு வீதியால் வந்த டாக்சி இருவரையும் சுமந்துகொண்டு சென்றது.

குழந்தை செவ்வந்தி தன் பிஞ்சுக்கரங்களால் மதனின் மூக்கைப் பிய்த்துப்பிடுங்கியது! அந்த இனிய காட்சி அமராவிற்கு இதமளித்தது. 'செவ்வந்தி ... நீயும் வளர்ந்து அண்ணாரைப்போல்' அப்பா வருவாரா வருவாரா என்று இனிமேல் என்னைக்கேட்கமாட்டாயில்லையா? என்று அமரா குசுகுசுத்துவிட்டு, வெளியே தன்பார்வைச் செலுத்தினாள், மதனின் ஏக்கம் நிறைந்த பார்வை அவள் கன்னக்கதுப்பில் நிலைகுத்திநின்றது.

(யாவும் கற்பனை)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி- வைஜெந்திமாலா
பார்த்திபன் கனவு

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
ஞாயிறு 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

இன்று நிதியுதவிக் காட்சி
10-30 மணிக்கு
அரசகட்டளை

# தஞ்சமளித்த வீட்டில் வஞ்சனை செய்தாராம்

(யாழ்ப்பாணம்)

அகதியாக வந்தஇளம்பெண் ஒருவருக்குவீடொன்றில் ஆதரவளித்தபோது, அவர் அங்குள்ள சேலைகளை எடுத்துக்கொண்டும்மறைந்துவிட்டாராம்.

பசறையைச் சேர்ந்த 18 வயதான மல்லிகா என்ற இப்பெண் இருதினங்களுக்குமுன் அகதியாக யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை வந்தடைந்தாரென்று கூறப்படுகிறது.

இப்பெண்ணை மற்றொரு பெண் பண்ணை அகதிகள் முகாமிற்கு அழைத்துச்சென்றதாகவும், முகாம்மூடப்பட்டுவிட்டதால், வேறு ஒரு வீட்டில் தஞ்சமளிக்கப்பட்டதாகவும் காலையில் பார்த்தபோது அகதியாக வந்த அந்தப்பெண், அவ்வீட்டிலிருந்த சேலைகளுடன் மறைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

பணிப்பெண்ணாகச் சென்று வீடுகளில் திட்டமிட்டுத் திருடும் கோஷ்டியைச் சேர்ந்தவராக இப்பெண் இருக்கலாம் எனச்சந்தேகிக்கப்படுகிறது.

(க-உ)

# வேப்பங்குளம் நீரோடையில் இளம் பெண்ணின் சடலம்

[வவனியா]

வவனியாப் பகுதியைச் சேர்ந்த வேப்பங்குளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பின்புறத்தில் இளம் பெண்ணின் சடலமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் பின்னாலுள்ள நீரோடையில் காணப்பட்ட இச்சடலம் அழுகியநிலையில் உள்ளது. உடலின் தலைப்பகுதியில் மண்டைஒடு மட்டுமே உள்ளது. கழுத்திற்குக்கீழ் எவ்வித சேதமும், ஏற்படவில்லை.

சடலத்தின் அருகில் பெட்டியொன்றும் 417 ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

வவனியா பொலிஸார் இது தொடர்பாக விசாரணைசெய்து வருகின்றனர். இது கொலையா அல்லது தற்கொலையா என்பதை அறிவதில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

[க-அ]

# யாழ்.நகரில் 3 சைக்கிள்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஒரே தினத்தில் மூன்று சைக்கில்கள் திருடப்பட்டுள்ளன:

அண்மைக்காலமாக வட பகுதியைக் கலக்கிக் கொண்டிருந்த கொள்ளை வழிப்பறி போன்ற பயங்கரவாத நடவடிக்கைகள் ஓய்ந்துள்ள இந்த வேளையில் தற்போது யாழ்ப்பாணப்பகுதிகளில் சிறு களவுகள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன.

சுபாஸ் கபேக்கு முன்பாகவும் யாழ். ஆஸ்பத்திரியிலும் யாழ் புகையிரத நிலையத்திலும் இச் சைக்கிள் களவுகள் இடம் பெற்றுள்ளன. (கா-இ)

# எதையும்......

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்மையை வெளிப்படுத்திவிடுவர்.

## தம்மைப்பற்றிப் புகழ்பவர்

தன்னுடைய தகுதிக்கு அதிகமாக தன்னைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பர். தன்னை விட இறமைசாலி இல்லையென மார்தட்டுவர். யாருக்கும் கீழ்ப்படியும் சுபாவமற்றவர். யாரையும்பற்றி அவதூறாகப் பேசுவதில் வல்லவர். எவருடனும் சுலபமாக தம்முடைய பேச்சிலே பகைமையைச் சம்பாதிப்பர். ஒன்றைத் தீர்மானித்துவிட்டால்சரியாக இருந்தாலும்சரி, பிழையாக இருந்தாலும்சரி அஞ்சாமல் செயல்படுத்துவர். யாரையும் நம்பமாட்டார்கள். இதற்கு எதிர்மாறாக குணம் சிலருக்கு வாய்ப்பதுமுண்டு.

## தலைமை தாங்குவர்

இவர்களது பேச்சுக்கள் நீதி, நேர்மை நிரம்பியுள்ளதால் தலைமைதாங்கும் பொறுப்புக்களை சுலபமாக ஏற்றுக்கொள்வர். சுயநலம் தோன்றுமிடின் பணம், பதவிகளை இலகுவாக அடையமுடியும். அப்படியாக அடைந்தவர்கள் ஒரு சிலரே பலபேர் நான்கு எண்ணிலே பிறந்திருப்பினும் அதிர்ஷ்டமடைந்தவர் ஒரு சிலர் என்பதால் நாலு எண் பிரபல்யமடையவில்லை.

நாலு எண்காரருக்கு 1, 10, 19, 28, தினங்களில் எக்காரியங்களில் ஈடுபட்டாலும் அதிர்ஷ்டத்தை அடைகின்றார்கள், 5, 14 23-ம் தினங்களில் காரியங்கள் பிரச்னையின்றி நிறைவேறுகின்றன.

## நண்பர்கள்

நாலு எண்காரர்களுக்கு நண்பர்கள் குறைவாகவேயுள்ளனர். மானசீகமாக நண்பர்களை வசீகரிக்கமாட்டாதவர்கள் இந்த நாலு எண்காரர்கள். கோடை, மாரிபோல அடிக்கடி நண்பர்களை மாற்றிக்கொள்வர். பிறருடைய கருத்துக்களை மதித்தாலும்நண்பர்களை விரோதியாக்கிக்கொள்வர். யார்செய்த உதவியையும்சொல்லிக்கொள்ளாததால் நண்பர்கள் விலகிக்கொவ்வர். 1,2, 4, 5 8 5எண்களில் பிறந்தவர்கள் இவர்களுக்கு பெரும்பாலும் நண்பர்களாக வாய்ப்பர்.

## எதிர்நீச்சல்

வாழ்க்கையில் அடையமுடியாத கற்பனைகளில் உள்ளவர்கள் இந்த நாலு எண்காரர்கள். பிந்திய காலத்திலே விவாகங்கள் இந்த நாலு எண்காரருக்கு நடைபெறுகின்றன.

நாலு எண்ணிலே பிறந்தவர்கள் செலவுசெய்வதில் மிகக்சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதால் முன்னேறுகின்றனர். உயர்பதவிகளை அடையும் பாக்கியசாலிகளும் இவர்களே 4-5, 4-1, 4-6. இவ்வாறு விதியெண்கள் அமைந்தவர்களுக்கு அதிர்ஷ்டங்கள் கிட்டுகின்றன.

4-வது வாரம்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம் சுற்றும் வாலிபன்
(கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
★ கமலஹாசன் ★ ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத் ★ ஸ்ரீதேவி
★ ஒய். விஜயா ★ அநுபாமா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்

மூன்று முடிச்சு

திரைக்கதை, வசனம், டைரக்ஷன் கே. பாலசந்தர்.

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30,6-30,9-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
தாயைக் காத்த தனயன்
(புதிய பிரதி)

★ நடிகர் காமினி கேட்கிறார்

# எம்.ஜி.ஆர். படத்தில் என்ன கலாச்சாரம் இருக்கிறது?

அது ஒரு ஹோட்டல். படப்பிடிப்புக்காக வந்திருந்த சிங்களத் திரையுலக மன்னன் காமினி பொன்சேகா, அந்த ஹோட்டலில்தான் தங்கியிருந்தார். எமக்குக் கிடைத்த அழைப்பின்மீது அவரைச் சந்திக்கச் செல்கின்றோம்.

அந்த அறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த எம்மை அன்புடன்– ''வணக்கம், வாருங்கள்'' -என்று கரங்கூப்பி தமிழில் வரவேற்கின்றார் காமினி! எமது 'சந்திப்பு' ஆரம்பமாகிறது.

ஈழத்துப்படத்துறையில் ஒரு 'புரட்சி'யையே ஏற்படுத்தி, விரைவில் வெள்ளித்திரைக்கு வரவிருக்கும் காமினியின் தமிழ்–சிங்களப் படமான 'காற்ருடி–சருங்கல'' பற்றிய பேச்சு முதலில் வருகிறது.

இப்படியான ஒரு படத்தை உருவாக்கவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது?–முதல் கேள்வி இது.

'திரைக்கதை என்ருல், பொதுவாகப் பலரும் கற்பனை என்றே கருதுவதுண்டு. ஆனால் 'சருங்கல' ஓர் கற்பனைச் சித்திரமல்ல. ஒரு உண்மைச் சம்பவத்தை மையமாகக் கொண்டு உருவானது. சுருக்கமாகச்சொல்வதென்ருல்; நமது நாட்டில் துரதிருஷ்டவசமாகத் தலைதூக்கிய இனக்கலவரத்தைப் பின்னணியாகக்கொண்டது எனலாம். 1958-ம் ஆண்டுக் கலவரம், இந்தப் படத்தில் எதிரொலிக்கிறது' என்று சுருக்கமாக விளக்கிவிட்டு;

'இனக்கலவரம் என்ருல், 1958ம் ஆண்டுச் சம்பவம்மட்டும்தான் என்று பொருள் அல்ல. நான் சின்னப்பையனாக இருந்தபோது என்னைத் தூக்கி, மார்போடு அணைத்து,கொஞ்சி விளையாடிய எனது எதிர்வீட்டு திரவிய நாடாருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள்–அவர் மீது ஏவிவிடப்பட்டவன்செயல்களும் இந்தப் படம் உருவாகுவதற்குக் காரணம்' என்று கூறினார் காமினி.

காமினியின் இத்துணிகர தேசிய ஒருமைப்பாட்டு முயற்சிக்கும்,பரந்த மனப்பான்மைக்கும் நாம் பாராட்டுத் தெரிவிக்குமுன்னரே, 'சருங்கல' பற்றி மேலும் சில விவரங்களை அவர் கூறுகின்ருர்.

'சருங்கல...அதுதான் காற்ருடியின் கரு எவ்விதமாக உண்மையைப் பின்னணியாகக் கொண்டு மலர்ந்ததோ, அதே மாதிரி இப்படத்தின் படப்பிடிப்புகளும் உண்மையான சூழ்நிலையிலேயே இடம்பெற்றிருக்கின்றன. இதில் கலந்துகொண்ட சில 'திடீர்' நடிகர், நடிகைகள்கூட நாம் எதிர்பார்த்ததை விட கூடுதலாக தங்கள் பங்கைச் செலுத்தியிருப்பது மிகவும் பாராட்டக்கூடியது என்று கூறுவேன். இந்த வரிசையில் கரவெட்டியைச்சேர்ந்த நடராஜா, வள்ளிப்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். படப்பிடிப்புக்காக நாம் கரவெட்டியில் ஒரு கோவிலைத் தேர்ந்தெடுத்தபோது எதிர்ப்பு உருவாகும் என்று எங்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டது. பொலிசார்கூட எமது முயற்சியைத் தடுத்தனர். ஆனால், மற்றவர்கள் எதிர்பார்த்ததுபோல் ஒன்றும் நடக்கவில்லை. மக்களினதும், கோயில் தர்மகர்த்தாக்களினதும் பூரண ஒத்துழைப்புடன் குறுகிய காலத்தில் எமது படப்பிடிப்புகளைப் பூர்த்திசெய்துகொண்டோம்' என்று மகிழ்ச்சியுடன்கூறினார் காமினி.

'தமிழிலும் சிங்களத்திலும் இப்படத்தைத் தயாரித்திருக்கின்றீர்கள். எல்லா ரசிகர்களுக்கும் புரியுமா?'–இது இரண்டாவது கேள்வி.

'நடராஜா என்ற தமிழ் பாத்திரத்தில் நான்தான் நடிக்கின்றேன். கரவெட்டியில் பல 'சிக்கல்களி'லிருந்து விடுபட்டு கொழும்புசெல்கின்றேன். அதுவரை படம் தமிழிலேதான் இருக்கும். நான் கொழும்புசென்றதும் சிங்களவர்களின் தொடர்பு ஏற்படுகிறது. இதிலிருந்து படம் சிங்களத்திலிருக்கும். நிலைமை இப்படியாக இருந்தாலும் தமிழ், சிங்கள ரசிகர்கள் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் வார்த்தைகள் அதிகம் இல்லாமல், கூடுதலான சம்பவங்களுடன் படம் தயாரிக்கப்பட்டிருப்பதுதான் இப்படத்தின் மற்றுமொரு சிறப்பு அம்சமாகும்' என்று பதிலளித்த காமினியிடம் மூன்ருவது கணையைத் தொடுக்கின்ருேம்–

'இலங்கையில் தயாராகும் தமிழ் படங்கள்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?'

'வேகம் காணுதபோதிலும், ஈழத்து தமிழ்ப்படத்துறையில் இப்போது நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. இது மேலும் வளருவதற்கு ஈழத்து தமிழ் ரசிகர்கள் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கவேண்டும். நமது நாட்டுக் கலைஞர்களைக் கைதூக்கிவிடவேண்டும்...'

–இப்படிக் கூறிய காமினி, எங்களைப் பார்த்து ஒரு கேள்வி தொடுத்தார்.

## சந்திப்பு: கே. ஜி. மகாதேவா

'இந்தியாவிலிருந்து இங்கு வரும் தரமற்ற, கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் படங்களினுல்தான் நமது நாட்டுப் படத்துறை பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனை உங்களால் மறுக்கமுடியுமா?'

'இந்தியப்படங்கள் மட்டும்தானு?' -நாம்கேட்டோம்.

'நிச்சயமாக! அதுவும் சில தமிழ்ப்படங்களினுல்தான் என்பதை நான் துணிந்து கூறுவேன்'–இப்படிக்கூறிவிட்டு–

'எம். ஜி. ஆரின் உலகம் சுற்றும் வாலிபன், இதயக்கனி— போன்ற பல படங்களிலிருந்தும் நீங்கள் என்ன விதமான கலாச்சாரத்தை எதிர்பார்க்கின்றீர்கள்?' என்று கேட்டார்!

'தென்னிந்தியாவிலிருந்து இங்கு வரும் சில தரக்குறைவான படங்களைத் தடை அல்லது கட்டுப்படுத்தவேண்டும் என்று கூறினுல்; 'எமது கலாச்சாரத்துக்குத் தடைபோடுகின்ருர்கள்' என்று குரல் எழுப்புகின்ருர்கள்! நான் மீண்டும் கேட்கின்றேன்...எம். ஜி. ஆரின் படங்களிலிருந்து நீங்கள் எதிர்பார்க்கும் கலாச்சாரம்தான் என்ன?'

காமினியே தொடர்ந்து கூறினார்;

'இந்தியத் தமிழ்ப் படங்களைத் தடைசெய்யவேண்டும் என்று நான் கூறவில்லை. நல்ல தரமான படங்களை இங்கு அனுப்பட்டும். அதுபோல எமது நாட்டு தமிழ்,சிங்களப் படங்களையும் அங்கு இறக்குமதிசெய்யட்டும். இது விரைவிலேயே நடைபெருதபட்சத் தமிழ், ஹிந்திப் படங்களுக்கு எதிராக நாம் கடுமையாகக் குரல் எழுப்பவேண்டிய சூழ்நிலை நிச்சயமாக உருவாகும்!'

இவ்விதமாகச் சற்று காரமாகவே, ஆனுலும் நிதானம் தவருமல் கருத்து வெளியிட்ட காமினி;

'நமது நாட்டுப் படமான 'கம்பெரலியா' பரிசு பெற்ற தரமான படம். இதனை நாம் இந்தியாவுக்கு அனுப்ப முயற்சித்தபோது, 15,000/- ரூபாமட்டுமே விலை கேட்டார்கள். ஆனுல் அவர்களின் தரமற்ற படங்கள் இங்கு பல்லாயிரக் கணக்கில் வாங்கப்படுகிறது. 'சீதாதேவி' என்ற ஆங்கிலப் படமொன்றை கூட்டுத் தயாரிப்பில் எடுத்தோம். என்னுடன் நடித்தவர் ஒரு இந்திய நடிகை. இந்தப் படத்தை பாகிஸ்தான், மலேசியா, பிரிட்டன், பங்களாதேஷ் போன்ற பல நாடுகள் வாங்க முன்வந்தன. ஆனுல் இதனை வாங்க இந்தியா மறுத்துவிட்டது. இந்தியாவுக்கு இப்படியான ஒரு கொள்கை இருக்கிறதென்ருல் ஏன் நமக்கும் இருக்கக்கூடாது' என்று கேட்டார்.

'இந்திய தமிழ்ப் படத்துறையிலும், பாலச்சந்தர் போன்றவர்கள் இருக்கத்தான் செய்கிருர்கள். இதனை நான் மறுக்கவில்லை. ஆனுல் எமது நாட்டுப்படங்களையும் இறக்குமதிசெய்து ஊக்குவிக்க அவர்கள் முன்வரவேண்டும் இது அவர்களது கடமை' என்று கூறிவிட்டு;

'இதில் ஏன் பாரபட்சம்? நான் கேட்பதில் நியாயம் இல்லையென்று நீங்கள் கூறமுடியுமா?'–இப்படிக் கேட்டு சந்திப்பை முடித்துக்கொண்டார் நடிகர் காமினி!

## மும்மொழித் திட்டம்—

( 1ம் பக்கத்தொடர்ச்சி)

முதலாளித்துவவாதி என்று புலப்படும். அதைப்போல இன்றைய அரசும், தமிழ் தேசிய இனத்தின் அங்கீகரிக்கப்பட்ட தலைவன் திரு. அமிர்தலிங்கத்தை முதலாளித்துவ வாதியென அழைப்பதில் என்ன தவறிருக்கிறது' என்று கூறினர்.

## தமிழினத்தின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூடிய எமது உரிமைகளைப் பற்றியே நாம்அங்கு பேசலாம்.

எம்மை மக்கள் ''தனிநாடு'' இலட்சியத்தை வென்றெடுப்பதற்காகவே தெரிவுசெய்துள்ளனர். இந்த அனுமதியை நாம், மீறி, எப்படி, எம்மை அழிக்க முனையும் பெரும்பான்மைமக்களின் அரசியல் சாசனத்தைத் திருத்தும் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க முடியும்?

### சொகுசுக்காக அல்ல...

இன்று நான் வகிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியின் மூலம் அரசின் காரையோ, கொழும்பில் வீட்டுவசதியையோ எனது சொகுசுக்காக நான் பயன்படுத்தவில்லை. வெளிநாட்டு தூதுவர்கள் இந்த நாட்டுக்கு வரும் பிறநாட்டு அமைச்சர்கள், வெளிநாட் பிரதிநிதிகளுக்கு எதிர்க்கட்சி என்ற ஸ்தானத்தில் இருந்து எமது இலட்சியத்தை எடுத்துரைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளேன். இதை நான் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக நடைபெற்ற கருத்தரங்கில் தெட்டத்தெளிவாக விளக்கியுள்ளேன். நான் இன்று இந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும், இந்த நாட்டுக்கு விரோதமாகச் செயல்படவேண்டியுள்ளது என அங்கு கூறிய பொழுது கூட அரசு உறுப்பினர்கள் அமைதியாக இருந்தார்கள். (கெ-இ)

மானிப்பாய்த் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு, வி. தர்மலிங்கம் உரையாற்றுகையில் கூறியதாவது;

'அக்டோபர் புரட்சியைக் கொண்டாடும் நாம், அந்த நாட்டின் மாற்றங்களை உணருகின்றபோது, அந்த நாட்டின் தேசிய இனங்களின் ஒற்றுமையையும் சிந்திப்பதற்கே இந்த விழாவைப் பயன்படுத்துகின்ருேம். அக்டோபர் புரட்சியென்பது, இலங்கையில் நடைபெற்ற புரட்சிகளைப் போலல்லாமல் சோஷலிச சித்தாந்தங்களை உலகம் முழுவதும் உணர்த்திய புரட்சியாகும்.

'பல்கேரியாவில் நடைபெற்ற பாராளுமன்ற அமைப்பு நாடுகள் மாநாட்டில் கலந்துகொண்ட சோவியத் நாட்டுப் பிரதிநிதி, 'இன விடுதலைக்குப்போராடும் நாடுகளுக்குச் சோவியத் யூனியன் உதவி செய்யும்' என்று கூறியுள்ளார். இது வரலாற்று உண்மை' என்றும் கூறினர்.

விழாவில் திருவாளர்கள் வெ. யோகேஸ்வரன், அ. வைத்திலிங்கமும் கருத்துரை வழங்கினர். திரு. சிவ. கணேசன் நன்றி கூறினர். (கெ)

## இன்று

[யாழ்ப்பாணம்]

கும்பிளான் ஸ்ரீ கற்பகரை கற்பக விநாயகர் ஆலயத்தில் இன்று மாலை திருமறைவிழா நடைபெறுகிறது.

## இப்படியும்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விஜயக்கோன் அவரைச் சோதனையிட்டபோது அவரின் மலவாசலிலிருந்து அப்பணத்தை மீட்டார்.

குறிப்பிட்ட நபரான குமார் மீது பொய்ப்புகார் கூறியதாக பொலிசார் வழக்குத் தாக்கல் செய்ய உள்ளனர். அவர் பொலிஸ்காவலில் வைக்கப்பட்டுள்ளார். (இ)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர்சேவைச் சங்கத்தின் 2-வது ஆண்டுக் கூட்டம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இன்று காலை நடைபெறுகின்றது.


## மரண அறிவித்தல்

கருகம்பானை காலஞ்சென்ற தம்பரின் மனைவி திருமதி சின்னச்சிப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் கொல்லங்கலட்டி சிராளர் மகளும், இராணி, கனகரத்தினம் (கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)ஆகியோரது தாயாரும், யாழ். நாவலர் வித்தியாலய பிரதி அதிபர் திரு. சி. பொன்னையா, சைவமங்கையர்கழக ஆசிரியை திருமதி திலகவதியின் மாமியாரும் யாழ். இந்து மாணவன் செங்கதிர்ச்செல்வனின் பேத்தியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிறு பி. ப. 3 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். 4/1, அரசடி ஒழுங்கை, ஐயனர்கோவில் ரோட், யாழ்ப்பாணம். 7779

## மரண அறிவித்தல்

### நவரத்தினம் தெய்வேந்திரம்

யாழ்.மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்க வான்சாரதி நவரத்தினம் தெய்வேந்திரம் 26.11-77ல் அகால மரணமடைந்துவிட்டார். இவர் நவரத்தினம், வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், தேசிங்கராஜா பவானி, பவளம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சாம்பசிவம், தியாகராசா, ரவீந்திரன், பாஸ்கரன், யோகராஜா, இந்திராணி, செல்வராணி, சாந்தி ஆகியோரின் சகோதரரும், சிதம்பரநாதன், வேந்தனுர், சந்திரகாந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவர். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக ஆனைக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2 மணிக்கு கல்லுண்டாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: பணியாளர் சங்கம்

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை. 7778

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

டொலர் அலுமினியம்

ONE DOLLAR


இப்பத்திரிகை 'ஈழநாடு, லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as News paper in Sri lanka.